**2011 யூன் 01 முதல் 2012 யூன் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல் மீதான விசேட கணக்காய்வு.**

# 2013

## மே

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

உள்ளடக்க அட்டவணை


| | | |
|---|---|---|
| **உள்ளடக்க அட்டவணை** | | 2 |
| **பணிப்பு** | | 3 |
| **கணக்காய்விற்கான அடிப்படைக் காரணம்** | | 3 |
| **பிரதான விடயங்கள்** | | 4 |
| **கணக்காய்வின் நோக்கெல்லை** | | 4 |
| **வரையறைகள்** | | 5 |
| **கணக்காய்விற்கான பின்னணி** | | 5 |
| **கணக்காய்வில் நிறைவேற்றப்பட்ட வேலை** | | 5 |
| **சுருக்கப் பதங்கள்** | | 6 |
| **நிறைவேற்றுப் பொழிப்பு** | | 7 |
| **விடயப்பரப்புகள்** | | 12 |
| 1. | கொள்வனவுத் திட்டம் | 12 |
| 2. | வழங்குனர்களைப் பதிவுசெய்தல் | 12 |
| 3. | விமைனுக் கோரல் | 17 |
| 4. | கேள்வி கோரல்களிற்கான திருப்தியற்ற பதிலளிப்புகள் | 21 |
| 5. | வழங்குனர்களை தெரிவு செய்தல் நடைமுறை (குறித்துரைத்தல்கள் அடங்கலாக) மற்றும் ஒப்பந்தங்களை கையளித்தல் | 23 |
| 6. | பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மீதான ஆய்வுகூடப் பரிசோதனை | 26 |
| 7. | இருப்பு மட்டம் பேணல் | 31 |
| 8. | பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிற்கான களஞ்சிய வசதியின் உபயோகம் | 34 |
| 9. | ஒக்டைன் - 92 பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு | 36 |
| 10. | எண்ணையினை எடுத்துச்செல்வதற்கான குழாய்வழி வலையமைப்பு | 37 |
| 11. | வெளியாகும் அளவு | 39 |
| 12. | செலுத்தவேண்டிய தாமதக்கட்டணம் | 39 |
| 13. | பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தலிலுள்ள குறைபாடுகள் | 41 |
| 14. | சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட ஆசியான் எண்ணை விநியோகத்தரை மீளநியமித்தல் மற்றும் கொள்வனவு நடைமுறைகளிற்கு முரணாக ஒப்பந்தங்களை கையளித்தல் | 61 |
| 15. | வியாபாரப் பெறவேண்டியவைகள் | 66 |
| 16. | எஸ்எஸ்சீஏபீசீ இன் தீர்மானங்களுடன் இணக்கமின்மை | 67 |

**பணிப்பு**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்தினால் (சீபீசீ) பல சந்தர்ப்பங்களில் தரமற்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (பாவனைக்குப் பொருத்தமற்ற / அழுக்கடைந்த) இறக்குமதி செய்து விநியோகிக்கப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக வாகனங்களும் இயந்திரங்களும் பழுதடைந்தன. மேலும், 2011 யூன் 01 முதல் 2012 யூன் 30 வரையான காலப்பகுதியில் சீபீசீ இனால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் கணக்காய்வொன்றை முன்னெடுக்குமாறு பொது முயற்சிகள் குழுவின் (சீஓபீஈ) தலைவரினால் நான் பணிக்கப்பட்டிருந்தேன். மேலும், தரமற்ற டீசல் இருப்பினை சந்தைக்கு விடுவித்தமையின் விளைவாக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பழுதடைந்தமை தொடர்பில் 3,000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சீபீசீ இனால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**கணக்காய்விற்கான அடிப்படைக் காரணம்**

- சீபீசீ இனால் தரம் குறைந்த எரிபொருள் விநியோகிக்கப்பட்டமையால் மேற்படி காலப்பகுதியில் பல சந்தர்ப்பங்களில் அதிக எண்ணிக்கையான மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் போன்றவை மோசமாக பாதிக்கப்பட்டதாக செய்திப்பத்திரிகைகள், ஏனைய பொதுசனத்தொடர்பு ஊடகங்கள், சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள், சிவில் சங்கங்கள் போன்றவற்றால் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை துறைமுக அதிகாரசபையின் கென்றி கிரேன்கள், இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்துகள், இலங்கை இரயில்வே திணைக்களத்தின் என்ஜின்கள் (லொகோமொடிவ்ஸ்), தபால் திணைக்களத்தின் மோட்டார் வாகனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகங்களின் குறித்த சில இநுந்திரங்களும் மோட்டார் வாகனங்ளும் மேற்படி பாவனைக்குதவாத பெற்றோலியப் பொருட்களினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட அரசாங்க நிறுவனங்களின் சொத்துக்களிற்கு ஏற்பட்ட சேதத்தினால் ஏற்பட்ட நட்டம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டது. அதனால், மேற்படி காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு தொடர்பில் மோசடி ஆபத்து காணப்பட்டது.

| நிறுவனத்தின் பெயர் | சேதமடைந்த பொருள் | | மீளமைத்தல் கிரயம் |
|---|---|---|---|
| | பொருள் வகை | அளவு | |
| | | எண்ணிக்கை | ரூபா |
| இலங்கை புகையிரதத் திணைக்களம் | என்ஜின் எரிபொருள் பில்டர்ஸ் | 252 | 1,810,407 |
| இலங்கை போக்குவரத்துச் சபை | பேரூந்துகள் | 289 | 650,659 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | டிரான்ஸ்பர் கிரேன்கள், பிரைம் மூவர்ஸ், டொப் லிப்ட் டிரக், போர்க் லிப்ட்கள், மோட்டார் கோச்கள், மினி பஸ்கள், கெப்ஸ் போன்றன | 57 | மதிப்பிடப்படவில்லை. இருப்பிலிருந்த பாகங்களால் பிரதியீடு செய்யப்பட்டன. |
| தபால் திணைக்களம் | வாகனங்கள் | 23 | 383,370 |

- 2011 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதியின் மொத்தக் கிரயம் ரூபா 417 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சந்தைவிலையில் ரூபா 6,543 பில்லியன் தொகையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 6.4 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

**பிரதான விடயங்கள்**

- பாவனைக்குதவாத எரிபொருளை விநியோகித்தமையின் விளைவாக பாதிக்கப்பட்ட தரப்பினர்களிற்கு இழப்பீட்டினை செலுத்தவேண்டிய பொறுப்பு ஆபத்துக் காணப்படுதல்.
- சீபீசீ இன் நன்மதிப்பு மற்றும் கீர்த்தியினை பாதிக்கும் சாத்தியத்தினைக் கருத்திற்கொள்ளாது தரத்தில் குறைவான டீசலினை சீபீசீ விநியோகிப்பதற்கு கையேற்று சந்தைக்கு வழங்குவதற்கு அனுமதித்தமைக்கான காரணங்கள்
- நாட்டின் பொருளாதாரத்தினையும் அபிவிருத்திச் செயன்முறையினையும் பாரியளவில் பாதிப்படையச் செய்யும் பின் விளைவுச் சாத்தியங்கள்
- நாட்டின் பெற்றோலிய வணிகத்தில் பிரதான பகுதியினை கையாளும் சீபீசீ இனால் பயன்படுத்தப்படும் தரக் கட்டுப்பாடுகள் மீது வாடிக்கையாளர் / பெது மக்கள் நம்பிக்கை இழத்தல்

**கணக்காய்வின் நோக்கெல்லை**

- 2011 யூன் 01 முதல் 2012 யூன் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்தல் மீதான கணக்காய்வு
- விசாரணைகளை மேற்கொள்ளல், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்குப் பொறுப்பான நபர்களை நேர்காணல், பகுப்பாய்வு மற்றும் ஏனைய கணக்காய்வு நடைமுறைகளைப் பிரயோகித்தலை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.
- நிறுவனம், அதன் சூழல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள புரிந்து கொள்ளல்
- கட்டுப்பாடுகளைப் பரிசோதித்தல் (விசாரணை, அவதானிப்பு, பரிசோதனை மற்றும் மீள் செயலாற்றல்)
- மேலும் அவதானம் செலுத்தவேண்டிய விடயப்பரப்புகளை இனங்காண்பதற்காக நியாயமான பகுப்பாய்வு நடைமுறைகளை செயற்படுத்தல்.
- விபரமான பரிசோதனை (கொடுக்கல்வாங்கல் கணக்கு மீதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் வகுதிகள்) – பொருண்மையான தவறான கூற்றுக்களின் மதிப்பிடப்பட்ட ஆபத்தினை பொருட்படுத்தாது கொடுக்கல்வாங்கல், கணக்கு மீதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் ஒவ்வொரு முக்கியமான வகுதிக்காக நிலைபேறான நடைமுறையினை வடிவமைத்து செயற்படுத்தல்.
- முன் அறிவித்தலின்றி தெரிவு செய்யப்பட்ட இடங்களில் கணக்காய்வு நடைமுறையினை செயற்படுத்தல் - குறிப்பாக மோசடி ஆபத்துக்களிற்கான பரிகாரத்தினைக் கருத்திற்கொள்கையில் இது பொருத்தமுடையதாகும்.
- பௌதீக மெய்மையாய்வு

**வரையறைகள்**

- கால வரையறை – குறித்துரைத்த 45 நாட்கள் வரையறுத்த காலப்பகுதியில் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டது.
- ஆவணச் சான்றுகள் இல்லாமை
- நம்பத்தகுந்த தகவல்களை வெளித்தரப்பினரிடமிருந்து திரட்டுவதற்கு நேர்காணல்கள் மற்றும் தபால் மூலமான சான்றுகளிற்குப் பதிலாக தொலைபேசி உரையாடல்கள், தொலைநகல் போன்றவற்றை பயன்படுத்த வேண்டியிருந்தமை.

**கணக்காய்விற்கான பின்னணி**

கணக்காய்விற்கான சிறந்த பின்னணி ஒன்றை பின்வரும் நிலமைகள் வழங்கின.

- சில பாவனைக்குதவாத பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு முறைகேடுகள் தொடர்பான தகவல்களை வெகுசன ஊடகங்கள் வெளியிட்டிருந்தமை.
- நிறுவனத்தின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள், அதன் சூழல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு தொடர்பான நடைமுறைகளை விளங்கிக் கொள்ளல் மற்றும் மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்கண்டு மதிப்பிடுதல்
- பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களினால் வெளியிடப்பட்ட தகவல்களின் படி, முறைப்படியான கேள்வி மதிப்பீடுகளின்றி குறிப்பிட்ட வழங்குனர்களிடமிருந்து பாவனைக்குதவாத பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை சீபீசீ இறக்குமதி செய்திருந்தமை வெளிப்பட்டது.

**கணக்காய்வில் நிறைவேற்றப்பட்ட வேலை**

கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் மீது அறிக்கையொன்றை நான் வழங்குவதற்கு முடியுமான விதத்தில் பின்வரும் கணக்காய்வு நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன.

- கணக்காய்வானது 2012 ஆகஸ்ட் 23 இல் தொடங்கப்பட்டு 2012 ஒக்தோபர் 10 இல் முடிவுறுத்தப்பட்டது.
- பின்வருவனவற்றை செவ்வை பார்ப்பதற்காக கீழ்வரும் கொள்வனவுக் கணக்காய்வுப் பரப்புகள் உள்ளடக்கப்பட்டன.

  * போட்டியான கேள்வி நடைமுறையா

  * கேள்விமனுக்களை மீளாய்வு செய்ய முன்னர் வெற்றிகரமான அளவீடுகள் தாபிக்கப்பட்டிருந்தனவா

  * சுதந்திர மீளாய்வுக் குழுவொன்று காணப்பட்டதா

* குறித்த கேள்விதாரர் பிரதிகூலங்கள் அடைவதனைத் தவிர்க்கும் வகையில் கேள்விமனுக் கோரலிற்கு முறையான நேரஅட்டவணை காணப்பட்டதா

* கடந்தகால செயலாற்றல், நற்பெயர், சட்டநடவடிக்கைகள், உற்பத்திப் பொருட்களின் தரம் போன்ற மீளாய்வு அடங்கலாக பிரதான வழங்குனர்களிடமிருந்து வழங்குனர் உத்தரவாதம் பெறப்பட்டிருந்ததா

* முகவர் பயன்பாட்டினை கேள்விமனு உள்ளடக்கியிருந்ததா அவ்வாறாயின் முகவரின் வகிபாகம், அதிகார மட்டம் மற்றும் எந்த முதல்வரிற்காக முகவர் செயற்படுகின்றார் என்பது, மற்றும்

* வேறுபட்ட மாதிரிகளுடன் பொருட்களை வழங்கல்

**சுறுக்கப்பதங்கள்**

| | |
|---|---|
| பீஓசீ | இலங்கை வங்கி |
| சீஈபீ | இலங்கை மின்சார சபை |
| சீபீசீ | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| சீபீஎஸ்ரீஎல் | இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் ரேமினல் லிமிடட் |
| டீஈஎஸ் | விநியோகித்தல் முன்னைய கப்பல் அடிப்படை |
| எப்சீஏ | எரிபொருள் சீராக்கல் கட்டணம் |
| ஜீபீபீ | பெரிய பிரித்தானிய பவுன் |
| எல்ஏடீ | லங்கா ஒடோ டீசல் |
| லேய்கன் | விநியோகக் காலம் |
| எல்சீ | நாணயக் கடிதம் |
| என்பீஏ | தேசிய கொள்வனவு முகவராண்மை |
| கேஸோலைன் | பெட்ரல் |
| கேஸ் ஒய்ல் | டீசல் |
| எஸ்பீஎம் | ‘‘சிங்கல் பொய்னட் பாய் மூரிங்’’ |
| எஸ்எஸ்சீஏபீசீ | அமைச்சரவை நியமித்த விசேட நிலையியல் கொள்வனவுக் குழு |
| ரீஈசீ | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு |

## நிறைவேற்றுப் பொழிப்பு

1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தினால் அரசாங்க தொழில்முயற்சியொன்றாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபீசீ) உருவாக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து மேலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. நாட்டின் சுபீட்சத்திற்கு பங்களிக்கும் அதேவேளை பிராந்தியத்திலுள்ள பெற்றோலியம் மற்றும் அதுசார்ந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் முன்னோக்கிய, சுற்றாடல் சார் முன்னனி நிறுவனமாக இருத்தலே சீபீசீ இன் தூர நோக்காகும்.

சீபீசீ இன் பிரதான குறிக்கோள்களாவன:

(அ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குனர் மற்றும் விநியோகத்தராக வணிகத்தை நடாத்திச்செல்லல்.

(ஆ) பெற்றோலியத்தினை வெளிக்கொணர்வதற்காக கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளலும் சுத்திகரிப்பினை நடாத்திச் செல்லலும் குறிக்கோள்களை அடைவதற்கு தற்செயலான அல்லது உதவியான எந்த வணிகத்தினையும் செயற்படுத்தல்.

கிடைக்கக் கூடியதாக இருந்த தகவல்களின் படி, பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகளில் காணப்பட்ட பிரதான மாற்றங்கள் கீழே உள்ளவாறாகும்.

| பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் | அமுலாகும் திகதி | | | காலப்பகதியில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2011 ஏப்ரல் 01 | 2011 ஒக்தோ. 30 | 2012 பெப்.12 | 2011 இன் 4 ஆம் காலாண்டு | | 2012 இன் 1 ஆம் காலாண்டு | |
| | விலை | விலை | விலை | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | |
| பெற்றல் - எல்பீ95 | 143.00 | 155.00 | 167.00 | 12.00 | 8.4 | 12.00 | 7.7 |
| பெற்றல் - எல்பீ90 | 125.00 | 137.00 | 149.00 | 12.00 | 9.6 | 12.00 | 8.8 |
| லங்கா ஒடோ டீசல் | 76.00 | 84.00 | 115.00 | 8.00 | 10.5 | 31.00 | 36.9 |
| லங்கா சுபர் டீசல் | 98.30 | 106.30 | 142.00 | 8.00 | 8.1 | 35.70 | 33.6 |
| லங்கா மண்ணெண்ணை | 61.00 | 71.00 | 106.00 | 10.00 | 16.4 | 35.00 | 49.3 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணை | 66.00 | 76.00 | 111.00 | 10.00 | 15.2 | 35.00 | 46.1 |
| பர்னஸ் ஒயில் - 800 | 52.20 | 52.20 | 92.20 | - | 0.0 | 40.00 | 76.6 |
| பர்னஸ் ஒயில் - 1500 | 50.00 | 50.00 | 90.00 | - | 0.0 | 40.00 | 80.0 |

2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, 2012 இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் பின்வரும் பிரதான பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் இடம்பெற்றன.

| திகதி | மாற்றங்கள் மற்றும் அளவீடுகள் |
|---|---|
| 2012 பெப்ரவரி 12 | பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்படன.<br>- பெற்றல் ரூபா 12 ஆல் லீற்றர் ஒன்று ரூபா 149 ஆக<br>- டீசல் ரூபா 31 ஆல் லீற்றர் ஒன்று ரூபா 115 ஆக<br>- மண்ணெண்ணை ரூபா 35 ஆல் லீற்றர் ஒன்று ரூபா 106 ஆக |
| 2012 பெப்ரவரி 14 | சாராசரியாக 20 சத வீதத்தினால் பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. |
| 2012 பெப்ரவரி 16 | பின்வரும் வீதங்களில் மாதாந்த மின்சாரப் பட்டியல் மீது எரிபொருள் சீராக்கல் கட்டணமொன்று (எப்ஏசீ) விதிக்கப்பட்டது. |

| துறை | எப்ஏசீ (சதவீதம்) |
|---|---|
| உள்நாட்டு நுகர்வோர்: | |
| - 0 – 30 (அலகுகள்/மாதம்) | 25 |
| - 31 - 60 (அலகுகள்/மாதம்) | 35 |
| - 60 இற்கு மேல் (அலகுகள்/மாதம்) | 40 |
| கைத்தொழில்கள் | 15 |
| ஹோட்டேல் | 15 |
| பொது நோக்கம் | 25 |

2011 யூன் 01 முதல் 2012 யூன் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்தல் மீது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தலே இக்கணக்காய்வின் நோக்கமாகும். அதன் படி, விபரமான கொள்வனவுத் திட்டமொன்று இல்லாமை, கொள்வனவு நடைமுறையில் நலிவுகள், உரிய நேரத்தில் நம்பகரமான ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளத் தவறியமை, தெளிவான தொடர்பாடல் இன்மை மற்றும் மாறிக் கொண்டிருக்கும் சந்தைச் சவால்களிற்கு முகம்கொடுப்பதற்கு தயாராக இருக்காமை, மேலதிகச் செலுத்தல்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கட்டளைகளை திட்டமிடுவதில் தாமதம், உயர் மற்றும் தாழ் ஒக்டேன் பெற்றலின் சிக்கனமற்ற கலப்பு போன்ற செயற்திறனின்மைகள் காரணமாக மீளாய்வுக்குட்பட்ட 13 மாத குறுகிய காலத்தில் சீபீசீ இற்கு ரூபா 8.3 பில்லியன் மதிப்பீட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த விடயங்கள் சீபீசீ இன் நற்பெயருக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் எதிர்மறையான தாக்கத்தினை விளைவித்திருந்தன.

| பந்தியின் இல. | விபரம் | பெறுமதி | | | |
|---|---|---|---|---|---|
| | | ஜீபீபீ | ஐ.அமெ.டொலர் | நாணய மாற்றுவீதம் | ரூபா |
| 2 (ஊ) | பதிவுக் கட்டணங்களை அறவிடாது வழங்குனர்களைப் பதிவு செய்தல். | - | 7,200.00 | 130.0000 [2] | 936,000 |
| 2(1)(ii) | வழக்குக் கோரிக்கைகள் மற்றும் சட்டக் கிரயம் | - | 750,246.83 | 127.1608 [1] | 95,401,987 |
| | -மேற்படி- | 6,590 | - | 205.4728 [1] | 1,354,066 |
| 5((vi) | வார்ணாம மாதத்தின் எந்தவொரு ஐந்து நாளிலும் ‘‘பிலட்ஸ்’’ விலையினை பயன்படுத்துவதற்கு வழங்குனர் (சிங்கப்பூரினைத் தளமாகக் கொண்ட கம்பனி) அனுமதிக்கப் பட்டமையால் சீபீசீ இற்கு நட்டம் ஏற்பட்டமை. | - | 9,082,489.00 | 114.2599 [2] | 1,037,764,163 |
| 11 | வழங்குனரின் பட்டியல் விலையிலிருந்து வெளியேறும் அளவு நட்டங்களை கழித்தமை காரணமாக சீபீசீ இற்கு நட்டம் ஏற்பட்டமை. | - | - | - | 26,535,673 |
| 12(அ) | சீபீசீ இன் செயற்பாட்டுச் செயற்திறனின்மை மற்றும் எண்ணைத்தாங்கி மட்டுப்பாடுகள் காரணமாக வழங்குனர்கள் தாமதக்கட்டணத்தினைக் கோரியமைம் கோரியமை | - | 1,522,261.02 | 127.1608 [1] | 193,571,929 |
| 12(ஆ)(ii) | ஏனைய கப்பல்கள் நேரத்திற்கு வருகை தந்த போதிலும் சீபீசீ இன் சரக்குகளை அகற்றுவதில் தாமதம் காரணமாக இழப்பீடுகளை கோரிப் பெற்றுக்கொண்டமை | - | 233,577.30 | 127.1608 [1] | 29,701,876 |
| 12(இ) | நாணயக் கடிதத்தினை திறப்பதில் தாமதம் காரணமாக தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளமை | - | 31,366.67 | 127.1608 [1] | 3,988,611 |
| 13(அ)(xii) | பாவனைக்குதவாத கேசோலைன் (92 ஒக்டோன்) கொள்வனவிற்கு கொடுப்பனவு செய்தமை | - | 20,293,127.00 | 114.8172 [2] | 2,330,000,000 |
| 13(அ)(xiii) | சீபீசீ இனால் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பாவனைக்குதவாத எரிபொருளை பாவித்த | - | - | - | 28,000,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மையால் வாகனங்களிற்கு ஏற்பட்ட சேதத்திற்காக கொடுப்பனவு மேற் கொண்டமை | | | | |
| 13(ஆ)(iv) | எரிபொருள் எண்ணையினை இறக்குமதி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்கு னர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்தி டுவதில் தாமதித்தமை காரணமாகவும் மின்சாரத் தடையினைத் தவிர்ப்பதற்காகவும் கூடிய விலையில் அவசரத் தேவை அடிப்படையில் ஏனைய வழங்குனர்களி டமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதன் விளைவாகவும் சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம் | - | 2,516,500.00 | 127.1608 [1] | 320,000,153 |
| 13(ஆ)(vii) | அலகு அடிப்படைக் காற்றினை வெக்கும் அடிப்படையில் மாற்றியமையால் சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம் | - | 54,147.51 | 127.1608 [1] | 6,885,441 |
| 13(ஆ)(viii) | விலையில் இரு தடவைகள் நிலையான வட்டத்தினை உள்ளடக்கி மேலதிகக் கொடுப்பனவை மேற்கொண்டமையால் சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம் | - | 2,060,842.00 | 127.1608 [1] | 262,058,317 |
| 13(இ)(i) | குறைந்த சல்பர் அடங்கிய எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானமெடுத்தல் தாமதம் காரணமாக சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம் | - | - | - | 37,224,000 |
| 13(இ)(ii) | குறைந்த சல்பர் அடங்கிய எரிபொருளிற்குப் பதிலாக ஒடோ டீசலை விற்பனை செய்தமையால் சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம். | - | - | - | 2,728,492,800 |
| 13(ஈ)(iii) | ஆறு மாதங்களிற்கான எரிபொருள் தேவையினை குறைத்து மதிப்பீடு செய்தமையாலும் அதன்விளைவாக ஏனைய வழங்குனர்களிடமிருந்து கொள்வனை மேற் கொண்டமையாலும் ஏற்பட்ட நட்டம் | - | 1,515,968.00 | 127.1608 [1] | 192,771,704 |
| 13(ஈ)(iv) | ஒப்பந்த விதிகளின் கீழ் பெற்றல் இறக்குமதிக்கான அமைச்சரவைத் தீர்மானத்துடன் இணங்காதும் முன்னைய சில மாதங்களின் சராசரி விலையிலும் அதிகூடிய கேள்வி விலையில் குறித்தநேர கேள்விமனு அடிப்படையில் பெற்றல் | | 2,422,571.00 | 127.1608 [1] | 308,056,066 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறக்குமதி செய்யப்பட்டமையாலும் சீபீசீ இற்கு ஏற்பட்ட நட்டம். | | | | |
| 13(உ)(ii) | முதலாவது அளிப்பை இரத்துச்செய்து மீளவும் கேள்விகோரலை மேற்கொண்ட மையின் விளைவாக சீபீசீ இற்கு ஏற்பட்ட மதிப்பீட்டு நட்டம். | - | 43,213.33 | 127.1608 [1] | 5,495,042 |
| 13(ஊ)(iii) | விற்பனையாளரிற்கு சாதகமாக கேஸ் ஒயில் இற்கான DES கொழும்பு விலை கணிப்பீட்டு அடிப்படையினை மாற்றியமை மற்றும் விற்பனையாளரினால் மாத விருப்பத் தெரிவினை (B/L அல்லது கையளிப்பு மாதம்) உயர்த்தியமை காரணமாகவும் சீபீசீ இற்கு ஏற்பட்ட மதிப்பீட்டு நட்டம். | - | 5,499,781.67 | 127.1608 [1] | 699,356,637 |
| **மொத்தம்** | | | | | **8,307,594,465** |

* நாணயமாற்று வீதம்

1. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி நாணயமாற்று வீதங்கள்

(சர்வதேச நாணயங்களின் நாளாந்த குறிகாட்டி வீதங்கள் - 2012 திசெம்பர் 31)

| **நாடு** | **நாணயம்** | **குறிகாட்டி வீதம் (ரூபா)** |
|---|---|---|
| ஐக்கிய இராச்சியம் | பவுண் | 205.4728 |
| ஐக்கிய அமெரிக்கா | டொலர் | 127.1608 |

## 2. உண்மையான வீதங்கள்

### விடயப்பரப்புகள்

**1. கொள்வனவுத் திட்டம்**

என்பீஏ வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவு மற்றும் 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆண்டுதோறும் சீபீசீ பொருத்தமான கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்தல் அவசியமாகும். மேலும், 2012 ஜனவரி 11 இல் அமைச்சரவையால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலுக்கமைய, 2012 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கொள்வனவு வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தில் மற்றும் நியமங்களிற்கமைய கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமையினை அமைச்சரவை அவதானித்திருந்தது. அதற்கமைய, பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர், தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து 2013 ஆம் ஆண்டிற்காக சீபீசீ இன் கொள்வனவுத் திட்டத்தினைத் தயாரித்து 2013 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறானதோர் கொள்வனவுத் திட்டம் இதுவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. வழங்குனர்களைப் பதிவுசெய்தல்.**

(அ) பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குனர்களைப் பதிவுசெய்தல் தொடர்பில் சிபட்கோ நியமங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய கையேடொன்றை (கேள்விதாரர்களை பதிவுசெய்தல்) சீபீசீ பயன்படுத்தியிருந்தது. 1987 மார்ச் 01 முதல் மேற்படி கையேடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் கையேட்டிற்கு சபை அங்கீகாரம் கிடைத்தமைக்கான சான்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. அத்துடன், கையேட்டிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் அநேக சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டன. ஆனால், அத்திருத்தங்களிற்காக சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கையேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கமைய பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இருப்பினும், வணிகச் சூழல் தேவைப்பா்டுகளின் மாற்றங்களிற்கமைய அறிவுசார் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து அந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை திருத்துவதற்கு சீபீசீ இனால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அவ்வப்போது கொள்வனவுச் செயன்முறையினை மீளாய்வு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காதிருந்ததுடன் அதன்விளைவாக கையேட்டிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சர்வதேச மட்டத்தில் அறிவித்தலை பிரசித்தப்படுத்துவதன் ஊடாக பெற்றோலியப் பொருட்களிற்கான வழங்குனர்கள் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமாயினும், உள்ளூரில் பிரசுரிக்கப்படுகின்ற நாளாந்த செய்தித் தாள்களில் மாத்திரமே வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான அறிவித்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2009 இலிருந்து 2013 மார்ச் வரை சீபீசீ இன் வெப் தளத்தில் அதனை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ‘‘பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கருத்தின் படி, 2013 ஏப்ரல் முதல் அமுலுக்குவரும் வகையில் இணையதளத்தில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுவருகிறது.’’

(உ) பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்படதிருந்ததுடன் கொள்வனவு வழிகாட்டல் விடயங்களிற்காக அதனை ரீஈசீ இற்கு கையளிக்காது பூர்த்திசெய்யப்பட்ட விண்ணபங்கள் மாத்திரம் ரீஈசீ இற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, முழுமையற்ற விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கான தீர்மானம் வர்த்தக முகாமையாளரால் மேற்கொள்ளப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பிதிவுசெய்வதற்கான கட்டணத்தினை செலுத்தியதன் பின்னர் வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், 25 வழங்குனர்களிற்கு ரூபா 936,000 தொகையான (ஏறத்தாழ டொலர் 7,200) பதிவுக் கட்டணம் விதிக்கப்படாது 2012 ஓகஸ்ட் 31 வரை பதிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(எ) ஆண்டிற்கு இரு தடவைகள் (கையேட்டின் படி பெப்ரவரி மற்றும் ஆகஸ்டில்) புதிய வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பினும், கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் போன்ற பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2011 நவம்பர் 17 இல் ‘‘டேய்லி நிவுஸ்’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த வழங்குனர்களைப் பதிவுசெய்தல் (வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான இறுதி அறிவித்தல்)அறிவித்தலின் படி, 2011 திசெம்பர் 15 ஆந் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாகும், அதற்கமைய, அத்திகதி வரை 13 விண்ணப்பப் படிவங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் 4 வழங்குனர்கள் மாத்திரம் அவர்களது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். இருப்பினும் மேலும் 17 விண்ணப்பங்கள் 2012 யூன் 30 வரை வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 3 வழங்குனர்கள் மாத்திரம் (விண்ணப்பத் திகதி முடிவுற்ற பின்னர்) பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். இருப்பினும், அக்காலப்பகுதியில்

வழங்குனர்களால் பதிவுசெய்வதற்காக 23 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய சீபீசீ இனால் வழங்கப்படாத 16 விண்ணப்பங்கள் ஒரு விண்ணப்பத்திற்கான ரூபா 5,000 கட்டணத்தினைப் பெற்றுக்கொள்ளாது சீபீசீ இனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததமை அவதானிக்கப்பட்டது. மேலும், வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை வழங்குவதற்காக பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் பதிவேடொன்றில் வழங்குனரின் விபரங்களைக் குறித்துக்கொள்ளாது விண்ணப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய, வழங்குனர்களைப் பதிவுசெய்தலில் மேற்பார்வை அல்லது கட்டுப்பாடு எதுவும் காணப்படவில்லை.

(ஏ) கையேட்டின் 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் படி கடைசியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் வழங்குனரின் கடந்த மூன்று வருட காலக் கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்தும் உண்மையான ஆவணங்கள் என்பன பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் சீபீசீ இன் வர்த்தக முகாமையாளரிற்குச் சமர்ப்பித்தல் வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டிற்கு வழங்குனர்களைப் பதிவுசெய்கையில் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தற்போதுள்ள வழங்குனர்களின் பதிவினை 2012 ஆம் ஆண்டிற்காக புதுப்பிக்கையில், 2002 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 11 ஆம் இலக்க என்பீஏ சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்நுட்ப இயலுமையும் அனுபவமும், நிதி இயலுமையும் மனித வள இயலுமையும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக 2011 ஆம் ஆண்டில் கோரப்பட்டிருந்த 63 கேள்விமனுக்களிற்கு பதிவுசெய்யப்பட்ட 72 வழங்குனர்களில் 55 வழங்குனர்கள் ஒரு கேள்வியையேனும் சமர்ப்பித்திருக்கவில்லை. பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் கருத்தின் படி, கேள்விதாரர்களிற்று கவர்ச்சிகரமற்ற குறைந்த அளவு, நிதி மட்டுப்பாடுகள் (180 நாள் கடன்) மற்றும் சீபீசீ இன் ஏனைய கேள்வி விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன பதிவுசெய்யப்பட்ட அனேக வழங்குனர்கள் குறைந்தளவு ஆர்வத்தினை வெளிப்படுத்தியமைக்கு காரணமாகும். சீபீசீ இன் கேள்வி கோரல்களிற்கு கடந்த இரண்டு வருட காலமாக மறுதழிப்பினை வெளிப்படுத்தாத பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களை பட்டியலிலிருந்து நீக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் படி வழங்குனர்களின் பட்டியல் அர்த்தமுள்ளதாகும்.

(ஒ) 2012 ஆம் ஆண்டிற்காக பதிவினைப் புதப்பிக்காத 17 வழங்குனர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டிற்காக பதிவினைப்

புதப்பிக்காத 8 வழங்குனர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டில் பிடமென் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்தன.

(ஓ) பொது நிதித் திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஎப்டீ/பீஎம்டீ/எஸ்ஈஏபீசீ/பொது/001 ஆம் இலக்க கடிதத்தின் படி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை (ரீஈசீ) நியமித்தல் அடங்கலான கொள்வனவு நடவடிக்கைகள் அரசாங்க கொள்வனவு வழகாட்டல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும், இருப்பினும், கீழே குறிப்பிடப்பட்ட அவ்வாறான கொள்வனவு வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கான முறைமைகளை உருவாக்குவதற்கு சீபீசீ தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

2006 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 11 ஆம் இலக்க என்பீஏ சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சீபீசீ இனால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) பெற்றொலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கும் பதிவினைப் புதுப்பிப்பதற்கும் அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகள் அடங்கலான வேலைத்திட்டமொன்றை அபிவிருத்திசெய்து மதிப்பிடுதல்.

(ii) வழங்குனர்களைப் புதுப்பிப்பதற்காக மறுதழிப்புச்செய்வதற்கு வழங்குனர்களிற்கான விண்ணப்பப் பதிவினை தயாரித்தல்.

(iii) வழங்குனர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு போதியளவு பிரசித்தப்படுத்தல். – அதாவது தேசிய செய்திப்பத்திரிகைகளில் மாத்திரம் வழங்குனர் பதிவுசெய்தலுக்கான விம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கு போதிளவு பிரசித்தப்படுத்தல் வழங்குனர்களின் இணையதளம் போன்றவாறான பொருத்தமான ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

(iv) பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலை நாளதுவரையாக்குதல் தொடர்பாக, விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான அழைப்புக்கு இரண்டு தடவைகள் பதிலளிக்காத அல்லது திருப்தியற்ற முறையில் செயற்பட்ட எந்தவொரு வழங்குனரையும் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் பட்டியலிலிருந்து நீக்குதல்.

(ஃ) மசகு எண்ணையை கப்பலில் அனுப்புவதற்காக கேள்விதாரர்களைப் பதிவுசெய்தல்.

(i) 2012 ஆம் ஆண்டிற்காக 23 மசகு எண்ணைக் கொள்கலக் கப்பல் வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அதில் 9 கப்பல்

வழங்குனர்கள் வருடாந்த பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

(ii) 2009 செப்தெம்பர் முதல் 2010 ஆகஸ்ட் வரை ஈரானின் ஹார்ஜ் தீவிலிருந்து கொழும்புக்கு ஈரானிய இலகு மசகு எண்ணையை ஏற்றி எடுத்துவருவதற்கு வெளிநாட்டு கப்பல் தரகு நிறுவனமொன்றுடன் (தாங்கிகளின் உரிமையாளரின் விருப்பத்திற்கேற்ப பொருத்தமான எண்ணைத் தாங்கி கப்பலினை தெரிவுசெய்ய முடியும்) சீபீசீ உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து 2010 திசெம்பர் 31 வரை அது இரு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், 2010 திசெம்பர் 30 – 31 இல் ஈரானின் ஹார்ஜ் தீவிலிருந்து 135,000 மெற்றிக் தொன் ஈரானிய இலகு மசகு எண்ணையினை ஏற்றி எடுத்துவருவதற்கு பொருத்தமான கப்பல் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 16 இல் கப்பலில் ஏற்றுவதற்கும் 2011 திசெம்பர் 08 – 09 இல் கொழும்பில் இறக்குவதற்கும் கப்பல் தரகிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2010 திசெம்பர் 24 இல் இடம்பெற்ற எஸ்எஸ்சீஏபீசீ கூட்டத்தில் கப்பல் தரகிற்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தலை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, சீபீசீ இரத்துச்செயதல் அறிவித்தலை கப்பல் உரிமையாளரிற்கும் வழங்குனரிற்கும் அனுப்பி வைத்தது. அதன் விளைவாக உரிமையாளர் இதற்கெதிராக சீபீசீ இடமிருந்து ஐ.அமெ.டொலர் 790,100.83 இனைக் கோரி வழக்குத்தாக்கல் செய்திருந்தார். வட்டியுடன் சேர்த்து ஐ.அமெ.டொலர் 750,246.83 கிரயம் பெரிய பிரித்தானியப் பவுன் 6,590 மற்றும் உரிமையாளரின் சட்டக் கிரயம் என்பவற்றை செலுத்துமாறு 2011 நவம்பர் 3 ஆந் திகதி சீபீசீ இற்கு இறுதி தீர்ப்புக் கிடைத்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- சீபீசீ தலைவரின் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதிய மற்றும் 2011 திசெம்பர் 19 ஆந் திகதிய சீஎச்/115/2011 ஆம் இலக்க கடிதங்களின் பிரகாரம், வழக்கறிஞர் ஒரவரை நியமிக்காதிருப்பதற்கும் வழக்கினை நிராகரிப்பதற்கும் சீபீசீ இன் பங்குபற்றலின்றி ஒரு தலைப்பட்சமான விசாரணைக்கு இடமளிக்குமாறும் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.
- சீபீசீ இன் பிரதான சட்ட உத்தியோகத்தருக்கு முகவரியிடப்பட்ட சட்டமா அதிபரின் 2011 ஜனவரி 11 ஆந் திகதிய கடிதத்தின் படி,

கப்பலேற்றல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த காலத்தில் வழங்கப்பட்ட கப்பல் பயண அறிவுறுத்தல்கள் காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தன. குறித்த எண்ணைக் கப்பல் கம்பனியுடன் காணப்படுகின்ற ஒப்பந்தம் வலுவுள்ளதாக காணப்படுவதுடன் இதனை மீறுதல் சட்டநடவடிக்கைக்கு உட்படும். இது தொடர்பில் சட்டமா அதிபரின் அபிப்பிராயமாவது சீபீசீ எண்ணைக் கப்பல் உரிமையாளருடன் கப்பலேற்றலுக்காக நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க புரிந்துணர்விற்கு வருதல் வேண்டும் அத்துடன் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன் கப்பலேற்று வதற்கு எதிர்கால ஒப்பந்தங்கள் தொடர்பில் சீபீசீ இன் ஒப்பந்தக் கடப்பாடுகளை மதிப்பீடு செய்தலும் வேண்டும் என்பதாகும். எந்தத் தரப்பினரும் பாதிப்புக்கு உட்படாமையினை உறுதிசெய்வதற்கு திருப்திகரமான புரிந்துணர்வு ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு பெற்றொலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

(க) வழங்குனர்களின் உள்ளூர் முகவர்கள்

(i) வழங்குனர்களைப் பதிவுசெய்கையில் உள்ளூர் முகவர்களின் தேவையினை இனங்காண்பதற்கு முறையான நடைமுறைகள் எதுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரே பெயரையும் அவ்வாறே வித்தியாசமான பெயர்களையும் பாவித்து ஒன்றுக்கு மேற்பட்ட வழங்குனர்களை ஒரு முகவர் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதற்கமைய, தனது முதல்வர் சார்பாக (வழங்குனர்) விலையிடல் தீர்மானங்களில் உள்ளூர் முகவர்கள் பங்கேற்கும் வாய்ப்புக்களை மட்டுப்படுத்துவதற்காக சீபீசீ இனால் கேள்விமனு ஆவணங்களைத் தயாரிக்கையில் போதிய அவதானம் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 3. விலைமனுக்களைக் கோரல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் 6.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், கேள்விமனுக்களை பதிவுத் தபாலில், தனிப்பட்ட முறையில் கையளித்தல் அல்லது பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுதல் ஓரிடத்தில் மாத்திரம்

பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் பொறியிடப்பட்ட உறையிலிட்டே சகல கேள்விமனுக்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆனால், சீபீசீ இனால் அக்கட்டுப்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேள்விமனுக்கள் தொலைநகரியினூடாக கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு/ பெறப்பட்டிருந்தன. அத்துடன், சபை அங்கீகாரமின்றி அண்மைக்காலமாக தொலைநகரியினூடாக கேள்விமனுக்களை கோரி சமர்ப்பிக்கப்படுவதனை/ பெறப்படுவதனை சீபீசீ நிறுத்தியிருந்ததுடன் இதன் விளைவாக உள்ளூர் முகவர்களற்ற சில பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிற்கு தமது கேள்விமனுக்களை கையளிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

(ii) கேள்விமனு அளிப்புக்களை பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் வழங்குனர்கள் அல்லது வழங்குனர்களின் முகவர்களால் வைப்புச்செய்யப்படும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக, 2012 நவம்பர் 20 ஆந் திகதி 14.55 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் கூரியர் சேவையினூடாக முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கேள்விமனு ஆவணங்கள் (கேள்வி இல. BK/77/2012 உடன் தொடர்புடைய) சீபீசீ இன் வர்த்தக முகாமையாளரால் திறக்கப்பட்டு சீபீசீ இன் ஊழியர் ஒருவரால் கேள்விப் பெட்டியில் இடப்படுதல் வெளிப்பட்டது.

(iii) மேலும், கேள்விமனு அளிப்புக்கள் பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் வைப்புச்செய்யப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2012 திசெம்பர் 31 இல் கேஸ் ஒயில் மற்றும் கேஸோலைன் இறக்குமதி செய்வதற்காக பெறப்பட்ட கேள்விமனு ஒன்று (கேள்வி இல. BK/05/2013 உடன் தொடர்புடைய) பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் இடப்பட்டதுடன் உடனடியாக சீபீசீ இன் வர்த்தக முகாமையாளரால் அது திறக்கப்பட்டு வைத்துக்கொள்ளப்பட்டதுடன் கேள்விமனு மதிப்பீட்டுக் குழுவிற்கு இது வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய கேள்விமனுக்களின் மதிப்பீட்டில் அக்கேள்விமனு கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்களை அகற்றுவதற்கு அல்லது திருத்தங்களை செய்வதற்கான வாய்ப்பினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) கேள்விமனுக் கோரல்களின் விபரங்களை பதிவுசெய்து வைப்பதற்கு பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் வரவழைக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட கேள்விகள் தொடர்பில் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட தொலைநகரியின் தேவையான குறைந்தபட்ச தகவல்கள் சீபீசீ இனால்

பேணப்படுகின்ற தொலைநகரிப் பதிவேட்டில் (தொலைநகரி பரிமாற்றல் அறிக்கை) சரியாகப் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு தொடர்பில் சீபீசீ இனால் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட தொலைநகரியின் தேவையான குறைந்தபட்ச தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகொண்ட தொலைநகரி இயந்திரங்கள் காணப்படவில்லை. எவ்வாறாயினும், சீபீசீ இனால் பேணிவரப்படுகின்ற அனேக தொலைநகரி இயந்திரங்கள் வழக்கிழந்தவையாகும் என்பது வெளிப்பட்டது. “2012 செப்தெம்பர் 13 இலிருந்து அமுலாகும் வகையில் தொலைநகரியூடாக கேள்வி மனுக்களைக் கோரல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளர் (BK/61/2012)குறிப்பிட்டிருந்தார்”

(ஈ) பெற்றோலியப் பொருட்களின் கொள்வனவுச் செயன்முறை, குறிப்பாக தொலைநகரி, தனிப்பட்ட முறையில் கையளித்தல் ஊடாக கேளவிமனுக்களைக் கோரல் மற்றும் கொடைமுனைவுகளைப் பெற்றுக்கொள்ளல், அல்லது பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுதல் என்பன சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரால் முறைப்படி மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அனேக சந்தர்ப்பங்களில் பெருமளவு எண்ணிக்கையான கேள்விமனுத் திறத்தல்கள் ஒரு நாளில் இடம்பெற்றிருந்ததுடன் அதன் விளைவாக வழங்குனர்களால் குறுகிய காலப்பகுதியில் தொலைநகரி மார்க்கம் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதனால் தொலைநகரி வழித் தடைகள் வழமையாக ஏற்பட்டிருந்தன. அதற்கமைய, உரிய நேரத்தில் கேள்விமனுக்களை சமர்ப்பிப்பதற்கு அனேக வழங்குனர்களிற்கு முடியாமல் போனதுடன் அவர்களில் சிலர் இது தொடர்பில் தமது வசதியின்மையினை அறிவித்திருந்தனர். உதாரணமாக, 2012 திசெம்பர் 04 ஆந் திகதி 15:00, 15:15 மற்றும் 15:30 மணிகளிற்கு மூன்று (3) கேள்விமனுக்கள் திறக்கப்பட்டு முறையே BK/38/2012, BK/39/2012 மற்றும் BK/41/2012 பாரிய எண்ணிக்கொண்ட கேள்விகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஊ) எஸ்எஸ்சீஏபீசீ 2011 திசெம்பர் 01 இல் இடம்பெற்ற அதனது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களால் விலைமனுக்களுக்கான கொடைமுனைவுகளும் திருப்தியற்ற பதிலளிப்புக்களை கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றை 2011 திசெம்பர் 07 இல் நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், அது ஐந்து முறைகள்

பிற்போடப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2012 திசெம்பர் 14 ஆந் திகதி 13:30 மணிக்கு இடம்பெற்றது. முறையான தொடர்பாடல் இன்மை காரணமாக குறைந்த எண்ணிக்கையான வழங்குனர்கள் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தமை வெளிப்பட்டது.

(எ) தொடர்பாடல் நோக்கத்திற்காக சீபீசீ இனால் நீண்டகாலமாக ஸ்ரீ லங்கா ரெலிகொம் (எஸ்எல்ரீ) இன் தொலைபேசி வழி பயன்படுத்தப்பட்டு வந்திருந்ததுடன் 2010 இற்கு முந்திய சில வருட காலமாக எஸ்எல்ரீ மற்றும் தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனி என்பவற்றினை சீபீசீ பயன்படுத்தி வந்திருந்தது. எவ்வாறாயினும், சீபீசீ இனை கொழும்பு 09 இலுள்ள அதனது புதிய கட்டிடத்திற்கு இடமாற்றியமையால் தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனிக்கும் சீபீசீ இற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி 2010 செப்தெம்பர் 17 முதல் தொடர்பாடல் சேவையானது முழுமையாக எஸ்எல்ரீ இடமிருந்து தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனிக்கு மாற்றப்பட்டது. அந்த மாற்றத்திற்கான காரணம் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. மேலும், புதிய தொலைபேசி வழியினை தாபித்து பயன்படுத்துதல் தொடர்பில் பின்வரும் முறைகேடுகள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டன.

(i) சீபீசீ இன் அப்போதைய தலைவர் குறித்த தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனியின் பணிப்பாளராவார் என்பதுடன் அவருக்கு இரண்டு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு. அதன்படி, சீபீசீ இன் தொலைபேசி வழியினை எஸ்எல்ரீ இடமிருந்து தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனிக்கு மாற்றியமை சீபீசீ மற்றும் தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனியின் பணிப்பாளர் சபையுடன் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கலாகும்.

(ii) சீபீசீ இற்கும் தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, குறித்த தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனியின் தொலைபேசி வழியல்லாத தொலைபேசிகளைப் பாவிப்பதற்கு சீபீசீ அனுமதிக்கப்படுவதில்லை.

(iii) அந்த வழிகளினூடாக செய்திகளைப் பரிமாற்றுவதில் இடையூறுகளும் தாமதங்களும் காணப்படுவதுடன் தொலைபேசி வழிகள் எப்போதும் நெரிசலாகக் காணப்படுவதனால் பக்ஸ் செய்திகளை அனுப்புதல் மற்றும் பெறுவது வழமையாக சிக்கலடைந்துள்ளது.

(iv) சில வேளைகளில் முழுமையற்ற மற்றும் தெளிவற்ற ஆவணங்கள் அனுப்பப்படுகின்றன.

(v) கடந்த காலங்களில் சந்திக்கநேரிட்ட அசௌகரியங்கள் காரணமாக மேற்கூறிய தனியார் உள்ளூர் தொலைபேசிக் கம்பனியினால் வழங்கப்பட்ட தற்போதைய தொலைபேசி வழிகளை முன்னைய எஸ்எல்ரீ வழிகளிற்கு மாற்றுமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இந்நிலமையினை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கேள்விமனுக் கோரல்களிற்கான திருப்தியற்ற பதிலளிப்புகள்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 73 வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், மேற்படி காலப்பகுதியில் ஒருசில வழங்குனர்கள் மாத்திரமே கேள்விமனுக்களைச் சமர்ப்பிப்பதில் ஆர்வம் செலுத்தியிருந்தனர். விபரம் வருமாறு.

| விபரம் | ஆண்டு | |
|---|---|---|
| | **2012** | **2011** |
| விலைமனுக் கோரல்கள் அனுப்பிவைக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் எண்ணிக்கை | 73 | 73 |
| ஆண்டில் பேரளவாக இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தடவைகள் | 56 | 63 |
| பேரளவு இறக்குமதி தடவைகள் - மிதக்கவிடப்பட்ட (குறித்தநேர) கேள்விமனுக்கள் | 40 | 37 |
| பேரளவு இறக்குமதி தடவைகள் - காலம்குறித்த ஒப்பந்தங்கள் ஊடாக | 16 | 21 |
| சீபீசீ இனால் கோரப்பட்ட கேள்விமனுக்கள் இரத்துச்செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் | - | 05 |
| கேள்விகளைச் சமர்ப்பித்திருந்த வழங்குனர்களின் எண்ணிக்கை | 14 | 10 |
| ஆண்டின் போது கேள்விகள் கையளிக்கப்பட்டிருந்த வழங்குனர்களின் எண்ணிக்கை | 7* | 5* |

*2011 மற்றும் 2012 ஆம் ஆண்டில் (2012 ஒக்தோபர் 31 வரை) மிதக்கவிடப்பட்ட கேள்வி கோரல்களுடாக பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கேள்விகள் அளிப்புச்செய்யப்பட்ட வழங்குனர் எண்ணிக்கை பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| கேள்விமனுக்களைச் சமர்ப்பித்திருந்த வழங்குனர்களின் எண்ணிக்கை | கேள்விமனுக்களிற்காக கிடைத்திருந்த கொடைமுனைவுச் சந்தர்ப்பங்கள் மற்றும் ஆண்டில் ஒப்பந்தக் கையளிப்புக்கள் | | ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்தக் கொடைமுனைவின் சதவீதமாக கிடைத்திருந்த கொடைமுனைவுச் சந்தர்ப்பங்கள் | |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 2012 சந்தர்ப்பங்கள் | 2011 சந்தர்ப்பங்கள் | 2012 சதவீதம் | 2011 சதவீதம் |
| 1 | 12 | 9 | 30 | 25 |
| 2 | 8 | 8 | 20 | 22 |
| 3 | 4 | 14 | 10 | 37 |
| 4 | 6 | 3 | 15 | 8 |
| 5 | 4 | 3 | 10 | 8 |
| 6 | 5 | - | 12.5 | - |
| 7 | 1 | - | 2.5 | - |
| உயர்ந்தபட்சம் | 40 | 37 | 100 | 100 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து சந்தர்ப்பங்களில் கேள்விகோரல்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மிதக்கவிடப்பட்ட (குறித்தநேர) கேள்விமனுக்களுடாக பெற்றோலியப் பொருட்களை தொகுதியாக இறக்குமதி செய்திருந்த சந்தர்ப்பங்கள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் (2012 ஒக்தோபர் 31 வரை) முறையே 37 மற்றும் 40 ஆகும். மேற்படி ஆண்டுகளில் முறையே ஐந்து மற்றும் ஏழு வழங்குனர்களிற்கு மாத்திரமே கேள்விமனுக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. மேலும், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒரு வழங்குனரால் கேள்விமனுக்களிற்கு கொடைமுனைவு செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் முறையே ஒன்பது மற்றும் பன்னிரெண்டாகும்.

(ii) மேலும், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இரண்டு வழங்குனர்கள் மாத்திரம் கேள்விமனுக்களிற்கு கொடைமுனைவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் எட்டு ஆகும்.

‘‘பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளரின் கருத்தின் படி, சீபீசீ இன் அனுபவத்திற்கமைய சீபீசீ இன் கேள்விகளில் பங்குபற்றுவதற்கு வழங்குனர்கள் ஆர்வம் காட்டாமைக்கு பினவருவன காரணங்களாகும் என்பதுடன் அவற்றை நாட்டின்

குறித்துரைத்த காரணங்கள் எனவும் சர்வதேச வர்த்தக தன்மை காரணங்கள் எனவும் மேலும் இரண்டாக வகைப்படுத்தலாம்.''

நாட்டின் குறித்துரைத்த காரணங்கள்

- ஒப்பீட்டளவில் சிறிய பொதி அளவிலான கப்பற் பொருட்கள்
- கப்பல் மாதிரிகள் தொடர்பான வரையறைகள்
- களஞ்சியப்படுத்தல் வசதிகளில் வரையறைகள்

வர்த்தகக் காரணங்கள்

- சீபீசீ இன் கேள்விமனு விதிகள் மற்றும் நிபந்தனைகள் (உதாரணமாக: இலங்கையில் நீதி நடவடிக்கைகள்)
- நீண்ட கால கடன்கள் (உதாரணமாக: 180 நாட்கள்)

**5. வழங்குனர் தெரிவுசெய்தல் நடைமுறை (குறித்துரைத்தல்கள் அடங்கலாக) மற்றும் ஒப்பந்தங்களைக் கையளித்தல்.**

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் கால அடிப்படை ஒப்பந்தங்களின் மீது பெற்றோலியப் பொருட்களை விநியோகிப்பதற்காக வழங்குனர்களைத் தெரிவுசெய்தல் நடைமுறை மற்றும் ஒப்பந்தங்களைக் கையளித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்று மாத காலத்திற்காக 240,000 மெற்றிக் தொன் (1,800,000 பீப்பாய்கள்) கேஸ் ஒயிலை (0.25 வீத உயர் சல்பர்) 10 சதவீதம் கூட்டிக்/குறைத்து கொள்வனவு செய்தல்

2011 ஒக்தோபர் 01 இல் இலிருந்து மூன்று மாத காலத்திற்காக DES Colombo Basis Incoterms 2000 இன் கீழ் 240,000 மெற்றிக் தொன் (1,800,000 பீப்பாய்கள்) கேஸ் ஒயிலை (0.25 வீத உயர் சல்பர்) 10 சதவீதம் கூட்டிக்/குறைத்து கொள்வனவு செய்வதற்காக சீபீசீ கொடைமுனைவுகளை கோரியிருந்தது. அதற்கமைய, 2011 நவம்பர் 01 இலிருந்து தொடங்கும் மூன்று மாத காலத்திற்காக சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனியொன்றுடன் 2011 ஒக்தோபர் 04 இல் சீபீசீ தவணை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட நிலையியல் கொள்வனவுச் சபை (எஸ்எஸ்சீஏபீசீ) மேற்படி ஒப்பந்தத்தை DES கொழும்பு விலையில் பீப்பாய் ஒன்றுக்கு US$ 131.553 வட்டியுடன் கொரிய எண்ணைக் கம்பனிக்கு கைளிப்பதற்கு அங்கிகாரமளித்திருந்தது. அதேவேளை, சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எமிரேட் எண்ணைக் கம்பனியொன்று (EOCBS) தற்போது சீபீசீ இற்கும் EOCBS

இற்கும் இடையே காணப்படும் கேஸ் ஓயில் ஒப்பந்தினை அதே விதிகள் நிபந்தனைகளின் கீழ் DES கொழும்பு விலையில் பீப்பாய் ஒன்றுக்கு வட்டியுடன் US$ 131.016 வழங்குவதற்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு காலநீடிப்புச் செய்யுமாறு 2011 செப்தெம்பர் 06 ஆந் திகதி கோரியிருந்தது. அத்துடன், மேற்படி சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனி 2011 ஆகஸ்ட் 31 இல் வலு மற்றும் சக்திவள அமைச்சரவை நியமித்த உப குழுவிற்கு சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியலிற்கு அமைவாக DES கொழும்பு விலையில் பீப்பாய் ஒன்றுக்கு வட்டியுடன் US$ 131.023 வழங்குவதற்கான அதன் உடன்பாட்டினை 2011 செப்தெம்பர் 23 ஆந் திகதி மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தது. மேற்கூறிய EOCBS இனால் குறைந்த விலை வழங்கப்பட்டிருந்தும் கேள்வியானது மேற்படி சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனிக்கு கூடிய விலைக்கு (பீப்பாய் ஒன்றுக்கு US$ 131.023) கையளிக்கப்பட்டிருந்தது

(ஆ) மேற்படி உற்பத்திப் பொருளை DES கொழும்பு விலையில் பீப்பாய் ஒன்றுக்கு US$ 130.935 வட்டியுடன் வழங்க முடியுமென மேற்படி EOCBS 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதி அறிவித்திருந்ததுடன் இப்பொருளிற்கான மிகக் குறைந்த விலையாகவும் அது காணப்பட்டது. இருப்பினும், அக்கொடை முனைவினைக் கருத்திற்கொள்ளாது அதே திகதியில் மேற்படி சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனியிலிருந்து குறித்த பொருளைக் கொள்வனவு செய்வதற்கு எஸ்எஸ்சீஏபீசீ அங்கீகாரம் வழங்கியிருந்தது. "*2011 செப்தெம்பர் 09 ஆந் திகதி கேள்விமனுக்கள் திறக்கப்பட்ட பின்னரே DES கொழும்பு விலையில் பீப்பாய் ஒன்றுக்கு வட்டியுடன் US$ 130.935 மதிப்பிடப்பட்ட விலையில் மேற்படி EOCBS 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதி கொடைமுனைவை சமர்ப்பித்ததாகவும் அதன்காரணமாக, அது குறைந்த விலையாகக் காணப்பட்ட போதிலும், கேள்விகள் திறக்கப்பட்ட பின்னர் குறைவான விலைகொண்ட கேள்விதாரருடன் மாத்திரமே பேச்சுவார்த்தை நடாத்தப்பட முடியும் என்பதால் அவர்களது கொடைமுனைவைக் கருத்திற்கொள்ள முடியாது இருந்ததாக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.*" எவ்வாறாயினும், மேற்படி சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனியானது சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களை அரசாங்கத்திற்கு அரசாங்கம் என்ற அடிப்படையில் நாட்டுடன் இணைந்து விநியோகிப்பதற்கு விபரமான பிரேரணையை சீபீசீ இற்கு அனுப்பி வைத்திருந்தமையால் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதற்கமைய, மேற்படி சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனியின் கேள்விமனு மேற்குறிப்பிட்ட பெற்றோலியப் பொருட்களின் கொள்வனவு அழைப்பிற்கான ஆர்வவெளிப்பாடாக இல்லாதிருந்தமை வெளிப்பட்டதுடன் மேற்படி உண்மை நிலையினை எஸ்எஸ்சீஏபீசீ கருத்திற்கொள்ளாது மேற்குறிப்பிட்ட சிங்கப்பூரினை தளமாகக்

கொண்ட எண்ணைக் கம்பனியிடம் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

(இ) அத்துடன், 2011 செப்தெம்பர் 30 இல் இடம்பெற்ற அமைச்சரவை உப குழுக் கூட்டத்தில் *EOCBS 2011 உடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையிலுள்ள பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில் (பீஎல் திகதியிலிருந்து ஏறத்தாழ ஐந்து நாட்கள்) வழங்குனருடன் (*சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனி) ஒப்பந்த விதிகளில் கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சீபீசீ இன் தவணை ஒப்பந்தங்கள் விலையிடல் கொள்கையின் படி, US$ நாணய வடிவில் DES கொழும்பு விலையில் (இன்கோரேம்ஸ் 2000) கேஸ் ஒயில் (0.25 சதவீத உச்ச சல்பர்) பீப்பாய் ஒன்றுகாக கொடைமுனைவு செய்யப்பட்ட விலை Platt Market Scan இல் வெளியிடப்பட்ட கப்பலேற்றலுக்கு முன்னரும் பின்னருமான இரண்டு நாட்களில் கேஸ் ஒயிலிற்கு நிலவிய சிங்கப்பூர் குறித்தநேர விலையின் சராசரி எண்கணித இடையமாகக் காணப்படுதல் வேண்டும் என்பதுடன் முதல் 30 நாட்களிற்கான வட்டியற்ற கடன்காலத்தைக் கொண்ட நிலையான வட்டம்/கழிவினையும் உள்ளடக்கியிருப்பதுடன் 30 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை காலநீடிப்புச் செய்யப்பட்ட வட்டி வீதம் LIBOR ஆறு மாதங்களிற்கு மேற்பட்ட எல்லையின் அடிப்படையில் கப்பலேற்றல் திகதியில் நிலவிய வீதத்தில் இருத்தல் வேண்டும். இருப்பினும், மேற்குறித்த சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனியின் விலை கப்பலேற்றல் திகதியிலிருந்து சராசரியாக ஐந்து நாட்களில் நிலவிய விலையாக அல்லது விற்பனையாளரால் வெளியிடப்பட்ட ஏனைய ஐந்து நாட்களின் விலையாக காணப்பட்டது.

(உ) கப்பலேற்றலிலிருந்து சீபீசீ இனால் குறித்துரைத்த ஐந்து நாள் சமவிகித விலைக்குப் பதிலாக விற்பனையாளர் தனக்குச் சாதகமாக வெளியிட்ட கப்பலேற்றலிற்கு எந்தவோரு ஐந்து நாளிலும் நிலவிய சமவிகித விலைகளை பயன்படுத்துவதற்கு (மேற்குறித்த சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனி) வழங்குனருடனான உடன்படிக்கையில் காணப்படும் 8 ஆம் விடயத்துடன் சீபீசீ இணங்க முடியாதுள்ளதாக அமைச்சரவையின் உப குழுவின் தலைவரிற்கு முகவரியிடப்பட்ட 2011 ஒக்தோபர் 07 ஆந் திகதிய தனது கடிதத்தில் சீபீசீ இன் வர்த்தக முகாமையாளர் தெரிவித்திருந்தார். வழங்கனர்கள் அவர்களிற்குச் சார்பாக விலையிடல் திகதிகளை மாற்றியமை தொடர்பில் முன்னைய வழங்குனர்களுடன் சீபீசீ இற்கு கசப்பான அனுபவங்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். மேலும், *EOCBS* உடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் ஒத்த வடிவத்தில் சகல நுணுக்கமான செயற்பாட்டு

நிபந்தனைகளையும் கூட்டிணைத்து உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையின் உப குழுவின் அங்கீகாரத்தை அவர் கோரியிருந்தார்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) விற்பனையாளரிற்கு அதிகூடிய இலாபத்தை உறுதிசெய்யும் விதத்தில் விற்பனையாளரின் விருப்பத்திற்கமைய விலையினைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் விற்பனையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2011 செப்தெம்பர் 15 இல் ரீஈசீ இனால் மேற்கொள்ளப்பட்டிருந்த சிபார்சின் படி, சீபீசீ இற்குப் பாதகமான மேற்குறிப்பிட்ட நிபந்தனை காரணமாக அக்கொடைமுனைவை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என எஸ்எஸ்சீஏபீசீ அறிவுரை வழங்கியிருந்தது.

(iii) அத்திருத்தங்களிற்காக சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) அந்த மாற்றங்களிற்குத் தேவையான அங்கிகாரமின்றி (எஸ்எஸ்சீஏபீசீ) வர்த்தகத் திணைக்களத்தினால் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

(ஊ) இருப்பினும், மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு பாதகத்தினையும் சீபீசீ இன் முகாமைத்துவத்தின் கவனத்திற்குக் கொண்டுவராது, உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவை உள்ளடக்கி அதாவது “ விற்பனையாளரால் வெளியிடப்பட்ட கப்பலேற்றல் மாதத்தின் எந்தவொரு ஐந்து நாளினதும் சமவிகித விலையினைப் பயன்படுத்துவதற்கு” சீபீசீ இன் தலைவர் வழங்குனருடன் (மேற்குறித்த சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட எண்ணைக் கம்பனி) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார். அதற்கமைய, சீபீசீ உடன்படிக்கைகளின் பொதுவான நிபந்தனைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,037,764,163 இற்குச் சமமான US$ 9,082,489 மதிப்பீட்டு நட்டம் சீபீசீ இற்கு ஏற்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 1)

## 6. பெற்றோலியப் பொருட்களின் ஆய்வுகூடப் பரிசோதனை

இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தரம் மற்றும் தொகையினை கப்பலேற்றும் துறைமுகத்திலும் இறக்கும் துறைமுகத்திலும் நிச்சயிப்பிதற்காக சுதந்திரமான பரிசோதகர்களை சீபீசீ நியமித்திருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டன.

(அ) சுதந்திரமான பரிசோதகர்களை பதிவுசெய்தல்

(i) 2008 மே 02 இல் இடம்பெற்ற திணைக்களக் கொள்வனவுச் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அன்றைய திகதி முதல் சுதந்திரமான பரிசோதகர்களை நியமிப்பதற்கான நடைமுறை

தொடங்கப்பட்டது. ஆனால் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் அவ்வாறதோர் நடைமுறை பின்பற்றப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ii) 2007 நவம்பர் 05 ஆம் திகதி டேய்லி நிவுஸ் பத்திரிகையில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்த விளம்பரத்தின் வெளிப்பாடாக மசகு எண்ணை மற்றும் பெற்றோலியப் பொருட்களிற்கான சுதந்திர பரிசோதகர்கள்/பகுப்பாய்வாளர்களை பதிவுசெய்வதற்காக எட்டு (8) கிடைத்திருந்ததுடன் அதில் 6 விண்ணப்பதாரிகள் சுதந்திர பரிசோதகர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- திருத்திய என்பீஏ வழிகாட்டல்களின் (2006 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 11 ஆம் இலக்க என்பீஏ சுற்றறிக்கை) 3.4.3 ஆம் பிரிவின் பிரகாரம் சுதந்திர பரிசோதகர்கள்/பகுப்பாய்வாளர்களின் பதிவுப் பட்டியல் குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறையேனும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
- பொருட்களின் தரம் மற்றும் தொகையினை நிச்சயிப்பிதற்காக அவர்களை நியமிக்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லா சுதந்திர பரிசோதகர்கள்/ பகுப்பாய்வாளர்களிற்கும் சமமான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

“பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் கூற்றின் படி, சீபீசீ இனால் நியமிக்கப்பட்ட சுதந்திர பரிசோதகர்களை வழங்குனர்கள் / ஏற்றுமதிக் குதத்தில் ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அந்த சந்தர்ப்பங்களில் கப்பலேற்றல் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக வழங்குனர்கள் / ஏற்றுமதிக் குதத்தில் பிரேரிக்கப்பட்ட சுதந்திர பரிசோதகர்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் சீபீசீ இற்கு ஏற்பட்டிருந்தது.”

(iii) சுதந்திர பரிசோதகர்களால் வழங்கப்படுகின்ற சேவையின் சட்டரீதியான கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு அவர்களுடன் சீபீசீ உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(iv) சுதந்திர பரிசோதகர்கள் அகற்றும் துறைமுகத்தில் (கொழும்புத் துறைமுகம்) ஆய்வுகூடப் பரிசோதனையினை மேற்கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைச் சாட்சியத்தினை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். அதற்கமைய, தொழில் நடைமுறையின் பிரகாரம் நியம முறையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதனை உறுதிப்படுத்துவதே அவர்களது பொறுப்பானதுடன் உபகரணங்கள், கருவிகள் அல்லது அளவீட்டு

வகுதிகள், சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூட ஊழியர்களுடன் இணைந்து வேலைசெய்தல் அல்லது வேலைசெய்வதற்கு அவர்கள் பொறுப்பாக்கப்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக, சுதந்திரப் பரிசோதகர்களின் அறிக்கைகள் முற்றுமுழுதாக சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் அமைந்திருந்தன.

(ஆ) ஒவ்வொரு சரக்குப்பொதியின் தரம் மற்றும் தொகையினை நிச்சயிப்பிதற்கான சுதந்திரப் பரிசோதகர்களின் நியமனக் கடிதத்தில் பீப்பாய்களின் தூய்மை மற்றும் அசுத்தத் தன்மை சான்றிதழ்களை கப்பலேற்றல் தொடங்குவதற்கு முன்னர் சீபீசீ இற்கு சமர்ப்பித்தல் மிகவும் முக்கியமாகும் எனவும் கப்பலேற்றல் தொடங்க முன்னர் பொருட்களின் தரங்களை பெக்ஸ் மூலம் சீபீசீ இன் வர்த்தக முகாமையாளரின் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும் எனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(i)** அநேக சந்தர்ப்பங்களில் கப்பலேற்றப்பட்டு சில தினங்கள் கடந்த பின்னரே அவ்வாறான சான்றிதழ்கள் சீபீசீ இன் வர்த்தக முகாமையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. **விபரங்கள் பின்னிணைப்பு 2 இல் உள்ளன.**

(ii) வர்த்தக முகாமையாளரால் கப்பலேற்றலிற்கு முன்னர் அவ்வாறான அறிவுறுத்தல்கள் வழங்குனர்களிற்கு வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(இ) சுதந்திரப் பரிசோதகர்களின் நியமனக் கடிதத்தின் படி, கப்பலிற்கு ஏற்றமுன்னருள்ள கொள்கலன், பீப்பாய், குளாய்வழிச் சரக்குகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு கலன் பொறியிடப்பட்ட மாதிரியை எடுத்து அகற்றும் துறைமுகத்திற்கு பரிமாற்றம் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அகற்றும் துறைமுகத்திற்கு அவ்வாறான மாதிரிகள் பெறப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித சான்றும் காணப்படவில்லை.

(ஈ) சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனை தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

(i) ஆய்வுகூடப் பரிசோதனையின் பொறியிடப்பட்ட மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக கப்பல்களிலிருந்து மாதிரிகளைச் சேகரிப்பதற்கு பொறியிடப்படாத கொள்கலன்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் ஆய்வுகூடப் பரிசோதனை நடாத்தப்பட்டமைக்குச் சாட்சியாக சுதந்திர பரிசோதகர்களின் வரவுடன்

தொடர்புபட்ட பதிவேடுகள் சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கைகளின் படி, சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையினை சுதந்திரப் பரிசோதகர்கள் சான்றுறுதிப் படுத்தியிருந்தமையால் அவ்வாறான பரிசோதனையில் அவர்கள் ஈடுபட்டமைக்கு சான்றுகள் காணப்படவில்லை.

(உ) சரக்குகள் துறைமுகத்திலிருந்து அகற்றப்பட்ட திகதியிலிருந்து நீண்ட காலத்தின் பின்னரே சுதந்திர பரிசோதகர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக, சுதந்திர பரிசோதகர்களின் அறிக்கையானது குறைபாடுடைய பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியினை கண்டறிவதற்கும் தடுப்பதற்குமான பயனுள்ள கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. **விபரங்கள் பின்னிணைப்பு 3 இல் உள்ளன**. ‘‘பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளரின் கருத்தின் படி, தேவைப்படுத்தப்பட்ட குறித்துரைத்தல்களின் படி பொருளின் தரத்தினை உறுதிப்படுத்திய இடைக்கால அறிக்கையினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே சரக்குகள் அகற்றப்படுகின்றன. அதனால், நீண்ட காலத்தின் பின்னர் வழங்கப்படும் இறுதி அறிக்கையின் அடிப்படையிலன்றி இடைக்கால அறிக்கையில் உள்ள விடயங்களின் படியே என்பதாகும்.

(ஊ) சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற அநேக உபகரணங்கள், கருவிகள் மற்றும் அளவீட்டுப் பொருட்கள் மிகவும் பழமைவாய்ந்தவை என்பது வெளிப்பட்டதுடன் அதனால் அவற்றை முறையாக செயற்படுத்தவும் முடியாதுள்ளது. அதன்காரணமாக சில வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக: FAME பரிசோதனை) அத்துடன் இறக்குமதிசெய்யப்பட்ட உபகரணங்களை பொறுத்தவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப் பட்டிருக்கவில்லை. அதற்கமைய, சில பரிசோதனைகளை மேற்கொள்ளாது, பொருளை ஏற்றும் துறைமுகத்தில் தயாரிக்கப்பட்ட தரச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு துறைமுக அகற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. **விபரங்கள் பின்னிணைப்பு 4 இல் உள்ளன.**

(எ) சீபீஎஸ்ரீஎல் ஆய்வுகூடத்தினால் தயாரிக்கப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளின் பிரதிகள் சீபீசீ இற்கு வழங்கப்படவில்லை. வழமையாக, சீபீசீ இனால் பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திர பரிசோதகர்களின் அறிக்கைகள் சீபீஎஸ்ரீஎல் இற்கு பிரதியிடப்பட்டிருக்கவில்லை. அவ்வகையான ஒருங்கிணைப்புகள் இண்மையால் கப்பல்களிலிருந்து அல்லது நேரடியாக

வழங்குனர்களிடமிருந்தே சீபீஎஸ்ரீஎல் இன் முகாமைத்துவம் அவ்வறிக்கைகளை சேகரித்துக்கொள்கின்றது.

(ஏ) சில வகையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஆய்வுகூட வசதிகள் இண்மை

2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, சீபீஎஸ்ரீஎல் இல் அல்லது சீபீசீ இன் சுத்தீகரிப்பு ஆய்வுகூடத்தில் தேவையான உபகரணங்கள் இண்மை காரணமாக சில வகை ஆதனங்கள் பரிசோதிக்கப்படாதிருந்தமை வெளிப்பட்டது.

| ஆதனம்/பரிசோதனை | பரிசோதனை முறை | பொருள் | குறித்துரைப்பு |
|---|---|---|---|
| மோட்டார் ஒக்டேன் இல. (MON) | IP 237/ ASTM D 2700 | கேஸோலைன் 92 ஒக்டேன் | குறைந்தது 82 |
| மோட்டார் ஒக்டேன் இல. (MON) | IP 237/ ASTM D 2700 | கேஸோலைன் 95ஒக்டேன் | குறைந்தது 85 |

மேற்படி ஆய்வுகூட வசதிகள் இல்லாமை காரணமாக, ஏற்றும் துறைமுகத்தில் சுதந்திர பரிசோதகர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளில் சீபீசீ தங்கியிருந்தது.

(ஐ) கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 1996 வரை பரிசோதனை மற்றும் பொருட்களிற்கான அமெரிக்கச் சங்கத்தில் (ஏஎஸ்ரீஎம்) சீபீசீ ஒரு அங்கத்தவராகக் காணப்பட்டது. சீபீஎஸ்ரீஎல் இனை பரிசோதித்ததிலிருந்து ஏஎஸ்ரீஎம் இன் அங்கத்துவம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக ஏஎஸ்ரீஎம் இடமிருந்து உதவிகளை அதாவது விசேடமாக பின்வரும் பரப்புகளில் ஆய்வுகூடச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு சீபீசீ மற்றும் சீபீஎஸ்ரீஎல் என்பவற்றிற்கு முடியாது போயிருந்தது.

(i) சர்வதேச நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள்

(ii) புதிய மற்றும் முன்னேற்றகரமான பரிசோதனை முறைகள்

(iii) துறைரீதியான அபிவிருத்திகளிற்கான புதிய நுட்பங்கள்

(iv) ஆய்வுகூடத்தின் தற்போதைய நிலையினை செவ்வை பார்ப்பதற்கு சீபீசீ இற்கு முடியும் வகையில் ஆய்வுகூடங்கிடையிலான செவ்வை பார்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபடுவதற்கு

(v) ஆய்வுகூடப் பரிசோதனைக்கான மதியுரை

(vi) ஏஎஸ்ரீஎம் இன் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள்

(vii) ஆய்வுகூட முறைமைகளின் நாளதுவைரயாக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவு

*''கருத்தின் படி, 2013 முதல் ஏஎஸ்ரீஎம் இன் அங்கத்துவத்தினை சீபீசீ பெற்றுக்கொண்டுள்ளது என்பதாக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளர் தெரிவித்திருந்தார்''*

## 7. இருப்பு மட்டம் பேணல்

சீபீசீ, வரையறுத்த இலங்கை பெற்றோலியக் களஞ்சியப்படுத்தல் கம்பனி (சீபீஎஸ்ரீஎல்), ஜேசீரீ ஒயில் வங்கி மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, இலங்கை மின்சார சபையின் அங்கத்தவர்கள் மற்றும் வரிசை அமைச்சின் ஓர் உத்தியோகத்தர் ஆகயோரை இருப்பு மீளாய்வுக் குழு உள்ளடக்கியிருந்ததுடன் அதனது கூட்டங்கள் ஒவ்வொரு வாரத்திலும் இடம்பெற்றிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இருப்பு மட்டங்கள் தொடர்பில் சீபீசீ பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. அதாவது: மீள்கட்டளை மட்டம், உச்ச மட்டம், இழிவு மட்டம், மறுகட்டளைத் தொகை போன்றன. அத்துடன் ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்தியிலும் பாதுகாப்பு இருப்பினை பேணியிருக்கவுமில்லை.

(ஆ) சீபீஎஸ்ரீஎல் இன் செயற்பாட்டு முகாமையாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்புத் தொகை பேணல் அறிக்கையினை முழுமையாகத் தழுவியே பெற்றோலியப் பொருட்களிற்கான கட்டளையிடல் தொகை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வு நோக்கத்திற்காக மேற்படி குழுவிற்கு பெற்றோலியப் பொருட்களைப் பேணுதல் தொடர்பான எந்தவொரு ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, தேவையான பெற்றோலியப் பொருட்களை உரிய வேளையில் வழங்குவதற்கு ஏற்றவகையில் இருப்பு மட்டக் கட்டுப்பாடுகளை தாபித்து பேணிவருவதற்கு சீபீசீ இற்கு உள்ள பொறுப்பு முறையாக நிறைவேற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதற்குப்பதிலாக, சீபீஎஸ்ரீஎல் இனால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே சீபீசீ பெற்றோலியப் பொருட்களை இறக்குமதிசெய்வதனை வழமையாகக் கொண்டிருந்தது.

(இ) 2011 யூன் 28 ஆந் திகதிய இருப்பு மீளாய்வுக் கூட்டக் குறிப்பின் படி, சீஈபீ இற்கு கேஸ் ஒயில் 3,300 மெ.தொன்களை 2011 யூலை 18 இல் வழங்குமாறு பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தியிருந்தார். இருப்பினும், அந்த அறிவுறுத்தலை பூர்த்திசெய்வதற்கு போதியளவு இருப்புக் காணப்படாமையால், சீஈபீ இன் தேவையினை சமாளிப்பதற்காக மேலதிகமாக 40,000 மெ.தொன் கேஸ் ஒயிலினை திறந்த சந்தையிலிருந்து கொள்வனவு

செய்யுமாறு பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சார்பாக மேலதிகச் செயலாளரினால் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) 2011 யூலை 7 ஆந் திகதிய பீஆர்டீ/3/2/4/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சீபீசீ கேள்விமனுவைக் கோராது 68,411 பீப்பாய் கேஸ் ஒயிலினை (9,145 மெ.தொன்) பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அமெ.டொ. 3.75 வட்டத்துடன் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்திருந்தது. (பீகே/26பீ/2011)

*"பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கருத்தின் படி, பின்வரும் காரணங்களால் சீபீசீ அவ்வப்போது பொற்றோலியப் பொருட்களின் பற்றாக்குறைக்கு முகம்கொடுத்திருந்தது/".*

- இலங்கை அதிகளவில் அணல் மின் உற்பத்தியிலேயே தங்கியுள்ளது. இருப்பினும், காலநிலையில் ஏற்படும் மாற்றங்களிலேயே எரிபொருள் விநியோகத் தேவை தங்கியுள்ளது.
- களஞ்சிய இயளலவு இருப்புக்கள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரையறைகளை விதித்தல் மிகவும் கடினமானதாகும்.
- 2009 இலிருந்து நிலவிவரும் நிதிப் பிரச்சினை நிலமை காரணமாக மேலதிக இருப்பினை வைத்திருத்தல் சாத்தியமற்றதாகும் என்பதுடன் நாணயக் கடிதங்களை உருவாக்குவதில் அவ்வப்போது தாமங்களை ஏற்படுத்தியிருந்தது.
- ஆண்டிற்கு 4 – 6 சத வீதம் என்ற அடிப்படையில் கடந்த ஆண்டுகளில் பெற்றோலியப் பொருட்களிற்கான கேள்வி அதிகரித்திருந்ததுடன், கிடைக்கக்கூடிய களஞ்சிய வசதி நிலையானதாகும்.

  சீஈபீ இடமிருந்து திடீரென விடுக்கப்பட்ட கோரிக்கையினை அரசாங்க நிறுவனத்தின் பொறுப்பு என்ற வகையில் புறக்கணிக்க முடியாமையினாலே மேற்படி நிலைமே ஏற்பட்டிருந்தது. அத்துடன் இக்காலப்பகுதியில் காணப்பட்ட மிகப் பொறுத்தமான ஏற்பாடு என்ற வகையில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

  முத்துராஜவல/கொலண்ணாவ குதங்களில் 10 புதிய தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையினைத் தயாரித்துக்கொண்டிருப்பதுடன் அது இன்னும் சில வாரங்களில் அமைச்சிற்கு கையளிக்கப்படவுள்ளது.

(ஈ) இருப்பு மீளாய்வுக் கூட்ட அறிக்கையின் படி, இறக்குமதி செய்யப்பட்ட அநேக பொருட்கள் இது வரை கிடைக்கப்பெற்றிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன்

அதன் விளைவாக சீபீசீ இருப்புக் குறைவுப் பிரச்சினையை எதிர்கொண்டிருந்தது. 2011 மார்ச் 30 இல் இடம்பெற்ற இருப்பு மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை அமுல்படுத்தாமையின் விளைவாக சீபீசீ இருப்புக் குறைதல் நிலையை சந்தித்து 2011 யூன் மாதத்தில் குறித்தநேர கொள்வனவு (அவசர) அடிப்படையில் பாவனைக்குதவாதவை (கேஸோலைன்) இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. ***விபரங்கள் பின்னிணைப்பு 5 இல் உள்ளன.***

(உ) கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2012 ஆகஸ்ட் 28 இல் உள்ளவாறு பயன்பாட்டிலுள்ள மொத்த தாங்கிகளின் இளலளவு மற்றும் தாங்கிகளின் நிலைவரம் தொடர்பில் சீபீசீ மற்றும் சீபீஎஸ்ரீஎல் என்பவற்றால் பேணப்பட்டு வருகின்ற பதிவேடுகளிற்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் காணப்பட்டன.

| பொருள் | பேணப்பட்டுவருகின்ற பதிவேடுகளின் படி பயன்பாட்டிலுள்ள மொத்த இயலளவு | | வேறுபாடு |
|---|---|---|---|
| | சீபீசீ | சீபீஎஸ்ரீஎல் | |
| | மெற்றிக் தொன் | மெற்றிக் தொன் | மெற்றிக் தொன் |
| பெற்றல்- ஒக்டேன் 90 | 95,878 | 75,300 | 20,578 |
| பெற்றல்- ஒக்டேன் 95 | 8,434 | 8,440 | 06 |
| லங்கா ஒடோ டீசல் | 165,888 | 151,859 | 14,029 |
| லங்கா ஒடோ டீசல் | 8,041 | 13,030 | 4,989 |

(i) பெற்றல் (கேஸோலைன்)- ஒக்டேன் 90

| தாங்கி | தொகை | பேணப்பட்டுவருகின்ற பதிவேடுகளின் படி தாங்கிகளின் நிலைவரம் | |
|---|---|---|---|
| | மெற்றிக் தொன் | சீபீசீ | சீபீஎஸ்ரீஎல் |
| 17 | 3,756 | பயன்பாட்டில் | திருத்தம் |
| 31 | 13,100 | திருத்தம் | பயன்பாட்டில் |
| 41 | 9,449 | பயன்பாட்டில் | சுத்தப்படுத்தல்* |

சுத்தப்படுத்தல்* - 2011 யூன் மாதத்திலிருந்து பாவனைக்குதவாத பெற்றல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) லங்கா ஒடோ டீசல் (எல்ஏடீ)

| தாங்கியின் இல. | இயலளவு | பேணப்பட்டுவருகின்ற பதிவேடுகளின் படி தாங்கிகளின் பயன்படுத்தல் | |
|---|---|---|---|
| | | சீபீசீ | சீபீஎஸ்ரீஎல் |
| 26 | 6660 | எல்ஏடீ இற்காக | சுபர் மண்ணெண்ணைக்காக |
| 25 | 6600 | லங்கா பியூனர்ஸ் ஒயில் இற்காக (LF1500) | எல்ஏடீ இற்காக |
| 24 | 6600 | எல்ஏடீ இற்காக | லங்கா சுபர் டீசலிற்காக |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- சீபீசீ மற்றும் சீபீஎஸ்ரீஎல் என்பவற்றால் பேணப்பட்டு வருகின்ற தகவல்களின் நம்பகத்தன்மை வினாவிற்குரியதாகும்.
- தாங்கிகளின் உண்மையான நிலைவரம் மற்றும் இயலளவினை முறையாக இனங்கண்டு பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.
- சீபீசீ மற்றும் சீபீஎஸ்ரீஎல் என்பவற்றால் கோலண்ணாவ குதத்தில் உள்ள ஒரே தாங்கியில் எண்ணை இருப்பு பேணப்பட்டிருந்தது.

**8. பெற்றோலிப் பொருட்களிற்கான களஞ்சிய வசதியியின் பயன்படுத்துகை**

சீபீஎஸ்ரீஎல் இனால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற முத்துராஜவல மற்றும் கொலண்ணாவ தாங்கி பண்ணைகளில் சீபீசீ இற்கு களஞ்சிய இயலளவு காணப்படுகின்றது.

| பொருள் | முத்துராஜவல | | கொலண்ணாவ | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | தாங்கிகளின் எண்ணிக்கை | இயலளவு மெ.தொன் | தாங்கிகளின் எண்ணிக்கை | இயலளவு மெ.தொன் | தாங்கிகளின் எண்ணிக்கை | இயலளவு மெ.தொன் |
| எரிபொருள் எண்ணை (பியூரன்ஸ் ஒயில்) | 5 | 48,774 | 12 | 48,200 | 17 | 96,974 |
| லங்கா ஒடோ டீசல் | 16 | 103,259 | 5 | 48,600 | 21 | 151,859 |
| (iii) பெற்றல் (கேஸோலைன்) | 5 | 27,400 | 6 | 47,900 | 11 | 75,300 |
| - ஒக்டேன் 90 | - | - | 4 | 8,440 | 4 | 8,440 |
| - ஒக்டேன் 95 | | | | | | |
| மண்ணெண்ணை | 3 | 16,000 | 4 | 8,440 | 7 | 24,440 |
| மொத்தம் | 29 | - | 27 | - | 56 | - |

| விபரம் | முத்துராஜவல | கொலண்ணாவ |
|---|---|---|
| ஏற்றல் அடிப்படை - பெற்றல் (Loading arm) | 04 | 18 |
| - டீசல் | 10 | 15 |
| - மண்ணெண்ணை | 02 | 09 |
| அகற்றும் நேரம் | 02 நாட்கள் | 6 நாட்கள்* |
| கையளித்தல் முறை | பவுசர் | பவுசர், புகையிரத பீப்பாய், குளாய்வழி |
| அகற்றல் வசதி | 60,000 மெ.தொ | 40,000 மெ.தொ |

6 நாட்கள்*- பொருத்தமன குளாய்வழி இன்மையால்

முத்துராஜவல தாங்கிப் பண்ணையுடன் ஒப்பிடுகையில் கொலண்ணாவ தாங்கிப் பண்ணையிலிருந்து 06 நாட்கள் அகற்றல் காலம் மிக அதிகமானதாகும். அதன்படி, கொலண்ணாவ தாங்கிப் பண்ணை குளாய்வழி நாட்பட்டதாகவும் துறுப்பிடித்ததாகவும் காணப்பட்டது.

பெற்றோலிப் பொருள் ஒவ்வொன்றினதும் நாளொன்றிற்கான இயலளவு பயன்படுத்தல் கீழே உள்ள அட்டவணையில் தரப்படுகின்றது.

| பொருள் | திகதி | முத்துராஜவல | | | கொலண்ணாவ | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நாளொன்றில் கிடைக்கக் கூடிய இயலளவுச் சராசரி<br>மெ.தொன் | இயலளவுப் பயன்படுத்தல் (நாளொன்றிற்கான உள்ளபடியான சராசரி வழங்கல்)<br>மெ.தொன் | கிடைக்கக் கூடிய இயலளவின் சதவீதமாக இயலளவுப் பயன்படுத்தல்<br>சதவீதம் | நாளொன்றில் கிடைக்கக் கூடிய இயலளவுச் சராசரி<br>மெ.தொன் | இயலளவுப் பயன்படுத்தல் (நாளொன்றிற்கான உள்ளபடியான சராசரி வழங்கல்)<br>மெ.தொன் | கிடைக்கக் கூடிய இயலளவின் சதவீதமாக இயலளவுப் பயன்படுத்தல்<br>சதவீதம் |
| கேஸோலைன் - ஒக்டேன் 90 | | | | | | | |
| | 01.06.2012 | 1000 | 500 | 50.0 | 1100 | 1089 | 99.0 |
| | 08.06.2012 | 1000 | 553 | 55.3 | 1100 | 1203 | 109.4 |
| | 15.06.2012 | 1000 | 562 | 56.2 | 1100 | 1262 | 114.7 |
| | 22.06.2012 | 1000 | 532 | 53.2 | 1100 | 1202 | 109.3 |
| டீசல்-(எல்ஏடீ) | 01.06.2012 | 3500 | 1944 | 55.5 | 2100 | 2185 | 104.0 |
| | 08.06.2012 | 3500 | 1586 | 45.3 | 2100 | 2129 | 101.4 |
| | 15.06.2012 | 3500 | 1880 | 53.7 | 2100 | 2209 | 105.2 |
| | 22.06.2012 | 3500 | 2015 | 57.6 | 2100 | 1930 | 91.9 |

மண்ணெண்ணை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01.06.2012 | 250 | 143 | 57.2 | 200 | 159 | 79.5 |
| 08.06.2012 | 250 | 83 | 33.2 | 200 | 126 | 63.0 |
| 15.06.2012 | 250 | 133 | 53.2 | 200 | 215 | 107.5 |
| 22.06.2012 | 250 | 123 | 49.2 | 200 | 241 | 120.5 |

(அ) மேற்படி தகவல்களின் படி, முத்துராஜவல குதத்தில் தேவையான இயலளவும் ஏனைய விநியோக வசதிகளும் காணப்பட்ட போதிலும், சீபீசீ இனால் அதன் விநியோக இயலளவு உத்தமமாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெற்றோலியப் பொருட்கள் வழங்கல் செயற்பாட்டில் முத்துராஜவல குதம் குறைந்த மட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து சீபீசீ பின்வரும் நலன்களை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. **விபரங்கள் பின்னிணைப்பு 6 இல் உள்ளன.**

- துறைமுகக் கட்டணங்களைச் சேமித்தல்
- கப்பல்கள் தாமதிக்கப்படும் நேரத்தைக் குறைத்தல்
- தாமதக் கட்டணங்களைக் குறைத்தல்
- ஒப்படைப்புக் கிரயத்தை சேமித்தல்
- மனித வளக் கிரயங்களைக் குறைத்தல்
- குளாய்வழியூடாக எரிபொருளை அகற்றுகையில் ஏற்படும் ஒப்படைப்பு நட்டத்தைச் சேமித்தல்
- பவுசர் மூலம் எரிபொருள் ஒப்படைத்தல் நெரிசலை குறைத்தல்

**9. ஒக்டேன் - 92 பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு**

பிலட் சிங்கப்பூர் உற்பத்திப் பொருள் மதிப்பீட்டின் படி வேண்டப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையத்தில் கெசோலைன் (பெற்றோல்) 92, 95 மற்றும் 97 ஒக்டேனின் பெற்றோலிய உற்பத்திப் பொருள்களினைத் தயாரிக்க முடியாதிருந்தது. இதற்கிணங்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையத்தில் கெசோலின் - 90 ஒக்டேன் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நாட்டின் தேவைப்பாட்டிற்கும் சுத்திகரிப்பு நிலையத்தில் தயாரிக்கப்பட்ட அளவிற்குமிடையேயான வித்தியாசம் சர்வதேச சந்தையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பது வெளிப்படுத்தப்பட்டது. எனினும், பிலட் சிங்கப்பூர் உற்பத்திப்பொருள் மதிப்பீட்டிற்கு இணங்க கெசோலைன் - 90 ஒக்டேன் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததனால் (முன்னர் அவ்வாறான உற்பத்திப் பொருட்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது) சந்தையில் அவ்வாறான உற்பத்திப் பொருட்களுக்கான விலை விபரங்கள் காணப்படவில்லை. எவ்வாறாயினும் சர்வதேச சந்தையில்

காணப்பட்ட 92 ஒக்டேனின் விலையின் அடிப்படையில் கெசோலைன் - 90 ஒக்டேனை (92 ஒக்டேனை விடத் தரம் குறைந்ததாக இருந்தது) இறக்குமதி செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கேள்விகளைக் கோரியிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது 1,284,034 பெரல்கள் அளவான கொசோலைன் 90 ஒக்டேனை 92 ஒக்டேனின் விலையில் இறக்குமதி செய்திருந்தது. **விபரம் பின்னிணைப்பு - 7 இல் உள்ளன.**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெசோலைன் 92 ஒக்டேன் ஆனது கெசோலைன் 90 ஒக்டேன் உற்பத்திப் பொருட்களை விட செயற்திறனானதாகவும் உயர்ந்த தரமுடையதாக இருந்த போதலும் 90 ஒக்டேன் உற்பத்திப் பொருட்களுக்குப் பதிலாக 92 ஒக்டேனை கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர்களைத் தூண்டுவதற்காக எந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களோ அல்லது மேம்படுத்தல் நடவடிக்கைகளோ செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. “பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் கூற்றின் பிரகாரம் களஞ்சியப்படுத்தல், விநியோகம், குழாய் வழிகள் என்பவற்றிலுள்ள தற்போதைய டிட்டுப்பாடுகளின் காரணமாக கெசோலைன் பாவனையாளர்களுக்கான மூன்றாவது விருப்பத்தெரிவாக கெசோலைன் 92 ஒக்டேன் இனைச் சந்தைப்படுத்தும் நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காணப்படவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதனது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடன் எதிர்காலத்தில் ஈரோ நியம எரிபொருளினை அறிமுகப்படுத்துவதனை தற்பொழுது கருத்தில் கொள்கின்றது.”

(ஆ) கெசோலைன் 90 ஒக்டேன் உற்பத்திப் பொருளின் மிகைமதிப்பு தொடர்பாக சிபார்சுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கொல்வனவுச் செயன்முறையின் கேள்வி மதிப்பீட்டுக் கட்டத்தில் விநியோகத்தர்களுடன் பேரம்பேசுதல் அல்லது இணக்கப்பாட்டிற்கு வராது 92 ஒக்டேன் விலையில் கெசோலைன் 90 ஒக்டேன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) கெசோலைன் 90 ஒக்டேனைத் தயாரிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையத்தில் தயாரிக்கப்பட்ட தரம் குறைந்த கெசோலைனானது (90 ஒக்டேனைவிடத் தரம் குறைவானது) இறக்குமதி செய்யப்பட்ட 319,544 பெரல் கெசோலைன் 92 ஒக்டேனுடன் கலக்கப்பட்டிருந்ததனால் 2011 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் கலக்கப்பட்ட உற்பத்திப் பெருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 10. எண்ணையினை எடுத்துச்செல்வதற்காக குழாய்வழி வலையமைப்பு

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப்பொருட்களானவை கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல குதங்களில் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் இறக்கமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் குதங்களுக்கு (சீபீஎஸ்ரீஎல்) மாற்றுவதற்கு கொழும்பு துறைமுத்திற்கும்

கொலன்னாவைக்குமிடையே குழாய் வழிகள் காணப்பட்டன. கொழும்பு துறைமுகத்திற்கும் கொலன்னாவைக்கும் இடையே அமைக்கப்பட்ட ஐந்து குழாய் வழிகளில் இரண்டு குழாய் வழிகள் கைவிடப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டிலுள்ள ஏனைய மூன்று குழாய் வழிகள் சேதமடைந்து தரக்குறைவடைந்து மற்றும் பகுதியளவில் வெடிப்புற்றுக் காணப்பட்டன.

கடற்கரையிலிருந்து அண்ணளவாக 6 கிலோமீற்றருக்கும் முத்துராஜவெல குதத்திலிருந்து 7.2 கிலோ மீற்றருக்கு அப்பாலும் நடுக்கடலில் அமைந்துள்ள “சிங்கல் பொயின்ட் போய் முரிங்” (SPBM) ஊடாக முத்துராஜவெல தாங்கிக்கு எரிபொருள் பாய்ச்சப்படுகின்றது. கடல் கொந்தளிப்பாக இருக்கும் சந்தர்ப்பத்தல் அல்லது எஸ்பீபிஎம் பராமரிப்பிற்கு உட்பட்டிருக்கும் வேலையில் மாற்று விநியோக மூலங்கள் காணப்படவில்லை. அதேவேளை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை குதங்களுக்கிடையே மாற்றுவதற்காக முத்துராஜவெல குதத்திற்கும் கொலன்னாவ தாங்கிக்குடையே இணைப்புக்கள் காணப்படவில்லை. இந்த் மட்டுப்பாடுகளின் காரணமாக இக்குதங்களின் உச்ச அளவு பயன்பாடும் தடைப்பட்டிருந்தது. சபுகஸ்கந்தையில் அமைந்துள்ள மசகு எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாற்றுவதற்காக தனியான எஸ்பீபிஎம் காணப்படவில்லை.

அனைத்து வகையான பெற்றோலிய உற்பத்திப் பொருட்களும் புகையிரத எண்ணெய் தாங்கிகள் மற்றும் பவுசர்களின் ஊடாக கொலன்னாவை குதத்தினால் விநியோகிக்கப்படுகின்றது. எனினும், முத்துராஜவெல மற்றும் சப்புகஸ்கந்த குதங்களிலிருந்து எரிபொருளை எடுத்துச்செல்வதற்காக பவுசர்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடிவமைக்கப்பட்ட ஆயுள் காலம் இருபத்தைந்து ஆண்டுகள் மாத்திரமாக இருந்த போதிலும் கொலன்னாவை குதங்களில் தற்போதுள்ள குழாய்வழிகள் எழுபது ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும்.

(ஆ) போதிய குழாய் வழி வசதிகள் இன்மை மற்றும் தற்போதுள்ள குழாய்வழிகளின் குறைபாடுகள் காரணமாக பின்வரும் பலவீனங்கள் எழுந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) சீபீஎஸ்ரீஎல் இனால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 ஏப்ரலிலிருந்து நவம்பர் வரையான காலத்தின் போது இருபத்தேழு எண்ணைக் கசிவு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) ஆயுளுக்கும் ஆதனத்திற்கும் பாதிப்புக்களை விளைவிக்கும் குழாய் வழி ஓரங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நெரிசலான சட்ட விரோத வீடுகளின் மூலம் எண்ணை பாய்ச்சல் செயற்பாட்டின் போது பெற்றோலிய உற்பத்திப் பொருட்களில் கசிவு ஏற்படும் சாத்தியத்தினை மறுக்க முடியாதுள்ளது.

(iii) கப்பல்களிலிருந்து மிகவும் குறைந்த வேகத்தில் எரிபொருளை வெளிப்பாய்ச்சியதன் காரணமாக கப்பற்கட்டணம் மற்றும் தாமதக் கட்டணங்கள்

தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(இ) தனியான குழாய்வழிகள் இல்லாததன் காரணமாக ஒரே குழாய் வழியினூடாக பல பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை வெளியேற்ற வேண்டியிருந்தது.

(ஈ) "நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்" இற்காக 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டம் இதுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகர் இன்னும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புகையிரத வீதி ஓரமாக குழாய்களை அமைப்பதற்காக இலங்கை புகையிரதத்திடமிருந்து எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) டொல்பின் இறங்குதுறையில் எண்ணையினை வெளியேற்றும் வசதிகளை மீள் நிர்மாணிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 11. வெளியாகும் அளவு

பொதுக்கேள்வி ஆவணத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியேற்றுதல் துறைமுகத்திலுள்ள சுதந்திரமான பரிசோதகரினால் அறிவிக்கப்பட்டவாறு வெளியாகு நட்டம் (வெளியாகும் அளவு எதிர் பீ/எல் அளவு) 0.5 சதவீதத்திற்கு மிகையாக இருத்தல் மற்றும் அல்லது கப்பற் தளத்தில் ஏதாவது பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தானாக வெளியேறுதல், போன்ற சந்தர்ப்பத்தில் பட்டியலிடும் நோக்கத்திற்காக விற்பனையாளர் மிகை நட்டத்தினை மற்றும்/ அல்லது பீ/எல் அளவிலிருந்து கப்பல் தளத்தில் தானாக வெளியேறிய பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினை கழித்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2011 யூனிலிருந்து 2012 யூன் வரையான காலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் விலைப்பட்டியல்களிலிருந்து மேற்குறிப்பிட்ட நட்டங்கள் பதிவழிக்கப்படாதிருந்த குறித்த சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதற்கிணங்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 26,535,673 ஆக இருந்தது. **விபரம் பின்னிணைப்பு 8 இல் காணப்படுகின்றது.**

## 12. செலுத்தவேண்டிய தாமதக்கட்டணம்

(அ) கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக முறையே யுஎஸ் டொலர் 795,393.71 மற்றும் யுஎஸ் டொலர் 726,867.31 தொகைகள் தாமதக்கட்டணங்களாக விநியோகத்தர்களினால் கோரப்பட்டிருந்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு மற்றும்

நிதிசார் செயற்திறனின்மையின் விளைவாக விநியோகத்தர்களால் அத்தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருந்தன. விசேடமாக, மற்றுமொரு கப்பலுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக இறங்கு துறையில் காணப்படும் கப்பலிலிருந்து விடுவிக்கும் செயற்பாட்டை நிறுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கல் போன்றவாறான குறித்த சில செயற்பாட்டு பலவீனங்களும் நாணயக் கடிதங்கள் முதலியவற்றை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள் போன்றவாறான குறித்த சில நிதிசார் பலவீனங்களும் இறங்கு துறைமுகங்களில் விநியோகத்தர்களால் உடன்பட்டு தரித்துநிற்கக்கூடிய காலப்பகுதிக்குள் பொருட்களை வெளியாக்குவதிலுள்ள தாமதத்திற்கு காரணமாக இருந்தது. **விபரம் பின்னிணைப்பு 09 இல் உள்ளது.**

(ஆ) கப்பல்கள் வந்து சேருவதிலுள்ள தாமதத்தின் காரணமாக தாமதக் கட்டணம்

விநியோகத்தர்களுடனான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உடன்படிக்கையிலுள்ள பொது நிபந்தனையின் பிரகாரம் உடன்பட்ட தரித்துநிற்கும் காலப்பகுதிக்குள் பொருட்களை வழங்குவதற்கு கேள்வி வழங்கப்பட்ட கேள்வியாளர் முழுமையான பொறுப்பாளராக உள்ளார். உடன்பட்ட தரித்து நிற்கும் காலப்பகுதிக்குள் பொருட்களை வழங்கத் தவறினால் ஒவ்வொரு தாமத நாளுக்கும் டீஈஎஸ் பெறுமதியின் 0.01 சதவீதத்தினை விநியோகத்தர் தண்டப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறிய நிபந்தனையானது 2012 மார்ச் 05 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் செல்லுபடியானதாக இருந்தது. அத்திகதி வரையான தாமதத்திற்காக வழங்குனர்களிடமிருந்த தண்டப்பணங்களை அறவிடுவதற்க உரிய முறைமை காணப்படவில்லை. 2011 ஜனவரி 01 இலிருந்து 2012 செப்தெம்பர் வரையான காலத்தின் போது பல கப்பல்கள் தாமதித்து இறங்குதுறைக்கு வந்தடைந்திருந்த போதிலும் தாமதத்திற்காக உரிய விநியோகத்தர்கள் மீது தண்டப்பணங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது இறங்கு துறைக்கு அறுபத்து இரண்டு கப்பல்கள் வந்து சேர்ந்திருந்தன. அதில் 27 கப்பல்கள் தாமதித்து வந்து சேர்ந்திருந்தன. 2012 சனவரி 01 இலிருந்து செப்தெம்பர் வரையான காலத்தின் போது இறங்கு துறைக்கு வந்து சேர்ந்த 42 கப்பல்களில் இருபத்து மூன்று கப்பல்கள் தாமதமடைந்திருந்ததுடன் இதன் விளைவாக பின்வரும் விடயங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அடையப்பெற்றிருந்தன. **விபரம் பின்னிணைப்பு 10 இல் காணப்படுகின்றது.**

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இருப்புத் தட்டுப்பாட்டிற்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததனால் அவசர இருப்புக் கொள்வனவுகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது.
- எண்ணெய்த் தாங்கிகள் கொண்டிருந்த இருப்புக்களின் இறுதி மீதிகளையும் பயன்படுத்தவேண்டியிருந்தது.

- உரிய வேளைக்கு துறைமுகத்தை வந்தடைவதற்கு பட்டியல் படுத்தப்பட்டிருந்த ஆனால் முன்னைய கப்பல்கள் இருப்பு வெளிப்பாய்ச்சல்களைப் பூர்த்திசெய்யாததனால் இறங்கு துறையினை வந்தடைய முடியாதிருந்த ஏனைய கப்பல்களினால் தாமதக்கட்டணங்கள் கோரப்பட்டிருந்தன. உதாரணமாக :- லங்கா IOC P/L நிறுவனத்தினால் யுஎஸ் டொலர் 233,577.30 கோரப்பட்டிருந்தது.

(இ) நாணயக் கடிதங்களை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்களின் காரணமாக தாமதக்கட்டணங்கள் செலுத்துதல்

ஆசிய கம்பனியொன்றிடமிருந்து (நலன்பெறுனர்) 2012 யூலை 06 ஆந் திகதி 165,000 பெரல் கேஸ் ஒயில் (0.25% எம்எஸ்) மற்றும் 145,000 பெரல் கெசொலின் (90 யுஎன்என்) என்பவற்றை கட்டளை இலக்கம் பிகே/38/2012 இன் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கட்டளையிட்டிருந்ததுடன் 2012 யூலை 16 ஆந் திகதி நாணயக்கடிதத்தினை ஆரம்பித்தல் என்ற உத்தரவாதத்தின் பேரில் மேற்கூறிய கப்பலில் பொருட்களை ஏற்றி கொழும்புக்கு கப்பலைச் செலுத்துமாறு விநியோகத்தரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக முகாமையாளர் வேண்டியிருந்தார். ஏதும் தவறு அல்லது விடுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் விரைவுக் குறியீட்டினை உறுதிப்படுத்தி உடனடியாக வங்கிக்கு ஆலோசனை தெரிவிக்குமாறு 2012 யூலை 17 ஆந் திகதி இலங்கை வங்கி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை வேண்டியிருந்த போதிலும் உரிய வேளையில் வங்கிக்கு சரியான அவசரக் குறியீட்டினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது (2012 யூலை 19 ஆந் திகதியே தெரிவிக்கப்பட்டது) இதன் விளைவாக இலங்கை வங்கி 2012 யூலை 18 ஆந் திகதி ஒரு பிழையான வங்கிக்கு நாணயக் கடிதத்தினை அனுப்பியிருந்ததுடன் நலன்பெறுனர் (விநியோகத்தர்) இதனை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தார். எனினும், கப்பல் 2012 யூலை 22 ஆந் திகதி இறங்கு துறையை வந்து சேரும் என விநியோகத்தர் 2012 யூலை 21 ஆந் திகதி உறுதிப்படுத்தியிருந்தார். திருத்திய நாணயக் கடிதம் விநியோகத்தரின் வங்கிக்கு 2012 யூலை 24 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்த போதிலும் நாணயக் கடிதத்தினை ஆரம்பிப்பதிலுள்ள தாமதத்திற்காக தாமதக் கட்டணமாக யுஎஸ் டொலர் 31,366.67 தொகையினை விநியோகத்தர் கோரியிருந்தார்.

## 13. பெற்றோலிய உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்வதிலுள்ள குறைபாடுகள்

(அ) பிகே/17/2011 - 150,000 பெரல்கள் கேஸ் ஒயில் (டீசல்) 136,000 பெரல்கள் கெசோலைன் 92 மற்றும் 34,000 பெரல்கள் கெசோலைன் 95 என்பவற்றின் இறக்குமதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 மே 03 ஆந் திகதியிடப்பட்ட இருப்பு மீளாய்வுக் கூட்டத்தின் கூட்டக்குறிப்பின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட பெற்றோலிய உற்பத்திப்

பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெக்ஸ் மூலம் 61 வெளிநாட்டு விநியோகத்தர்களிடமிருந்து கேள்வி மனுக்களுக்கான கோரிக்கைகளுக்கான பதிலாக ஒரு விநியோகத்தர் மாத்திரம் (இந்திய எண்ணைக் கம்பனி) விலை மனுவினை வழங்கியிருந்தார்.

(ii) மேற்படி இந்திய எண்ணைக் கம்பனியால் வழங்கிய இந்த விலை மனுவில் கேஸ் ஒயில் (0.25 சதவீத மெக்ஸ்கல்பர்) கெசோலைன் (92 ஒக்டேன்) என்பவற்றின் தரம் கேள்வி மாதிரிகளுடன் இணங்கியிருந்தது. எனினும் கெசோலைன் (95 ஒக்டேன்) இன் அடர்த்தியானது மாதிரிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(iii) கெசோலைன் (92 ஒக்டேன்) இன் அளவினை அதிகரித்து கெசோலைன் (95 ஒக்டேன்) இன் அளவினைக் குறைக்குமாறு விநியோகத்தர் மேற்படி இந்திய எண்ணைக் கம்பனிக்கு வேண்டுகோள் விடுக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருந்தது.

(iv) எனினும் நிலையக் கட்டளை அமைச்சரவை நியமித்த கொள்வனவுக் குழுவானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சுடன் இணங்கியிருக்காததுடன் கேள்வியினை கெசோலைன் (92 ஒக்டகேன்) இற்கு மாத்திரம் மீளக்கோருமாறு பணிப்புரை வழங்கியிருந்தது. மேலும் கெசோலைன் (92 ஒக்டேன்) இன் அளவினை 136,000 பெரல்களிலிருந்து 255,000 பெரல்களுக்கு அதிகரிக்குமாறு விசேட நியமக் கட்டளை அமைச்சரவை நியமித்த கொள்வனவுக் குழு பணிப்புரை வழங்கியிருந்தது.

(v) கெசோலைன் (92 ஒக்டேன்) இனைக் கொள்வனவு செய்வதற்கு இரண்டாவது தடவையாக கேள்விகள் கோரப்பட்டிருந்தன. பதிவுசெய்யப்பட்ட 61 விநியோகத்தர்களிடமிருந்து கேள்வி மனுக்களுக்கான கோரிக்கைகளுக்குரிய மறுதலிப்பில் அதே கேள்வி தாரரான மேற்படி இந்திய எண்ணைய் கம்பனி மாத்திரம் கொடைமுனையினை வழங்கியிருந்தது. இந்திய எண்ணைக் கம்பனிக்கு கேள்வியினை வழங்குவதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட கொடைமுனையானது வேண்டப்பட்ட பொருள் வழங்கல் காலத்திற்குள் இல்லாதிருந்ததனால் ஏனைய மாற்று மூலங்களைத் தேடிப்பார்ப்பதற்கு எஸ்எஸ்சீஏபீசீ தீர்மானித்திருந்தது.

(vi) எஸ்எஸ்சீஏபீசீ இன் மேல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு எமிரேட்ஸ் எண்ணைய் கம்பனியிடமிருந்து மேற்கூறிய பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஆகக்குறைந்த தேவைப்பாட்டினை இறக்குமதி செய்வதற்குமான ஒழுங்குகைளைச் செய்யுமாறு அப்போதைய பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சின் செயலாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் குழுவிற்கு அறிவித்திருந்தது. இருப்பு நிலைமையின் கண்ணோட்டத்தில் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளை எஸ்எஸ்சீஏபீசீ பின்னர் ஆதரவளித்திருந்தது. எனினும், 2011 யூன் 01 ஆந்

திகதிய எஸ்எஸ்சீஏபி இன் அங்கீகாரத்தின் பின்னர் 2011 யூன் 02 ஆந் திகதி ஈஎன்ஓசீ இன் கொடைமுனை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே மதிப்பீடு எதுவும் இன்றி மேற்கூறிய விநியோகத்தரிடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு எஸ்எஸ்சீஏபீசீ அங்கீகாலத்தினை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vii) கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்றுவதற்குத் தவறியதன் காரணமாக அமைச்சரவையின் மேல் அங்கீகாரம் இக்கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(viii) வேண்டப்பட்ட விநியோக காலம் (லேகேன்) 2011 யூன் 17 இலிருந்து 18 வரையாக இருந்ததனால் இந்திய எண்ணைய் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட முன்னைய கொடைமுனை நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்திய எண்ணைய் கம்பனியினால் வழங்கப்பட்டவாறு ஒரே காலப்பகுதியில் அதாவது 2011 யூன் 16 ஆந் திகதி ஈஎன்ஓசீ இன் பொருட்களும் நாட்டிற்குள் வந்திருந்தது.

(ix) ஈஓசீபீஎஸ் இன் கொடைமுனையின் பிரகாரம் குறித்த சில மாதிரிகள் சீபீசீ இன் மாதிரிகளுடன் ஒத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனினும் அம்மீறல்களிலிருந்து உருவாகக்கூடிய தாக்கங்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மதிப்பீடு செய்திருக்கவில்லை. அத்துடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு இன்றி இக்கொடைமுனையினை எஸ்எஸ்சீஏபீசி அங்கீகரித்திருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **ஆதனம்/ பரிசோதனை** | **சீபீசீ மாதிரி** | **ஈஓசீபீஎஸ் மாதிரி** |
|---|---|---|
| ரெயிட் ஆவியாகல் அமுக்கம் @ 37.8 DEGC kpa | உச்சஅளவு 60 | உச்ச அளவு 70 |
| மோட்டார் ஒக்டேன் நம்பர் (mon) | இழிவு 82 | அறிக்கை |
| சந்தைப்படுத்தல் வர்ணம் | நிறம் அற்றவை | நிறம் அற்றவை அல்லது இளம் மஞ்சல் |
| வடிகட்டல் IBP DEG C | அறிக்கை | - |
| 10 சதவீதம் ஆவியாகியது DEGC | 45-70 | அறிக்கை |

| | | |
|---|---|---|
| 50 சதவீதம் ஆவியாகியது DEG C | 80 - 125 | அறிக்கை |
| 90 சதவீதம் ஆவியாகியது DEG C | உச்சஅளவு 180 | அறிக்கை |
| 150 DEG C சதவீதத்தில் ஆவியாகல் | இழிவு 70 | அறிக்கை |
| ஒட்சிசன் உள்ளடக்க அளவு சதவீதம் | உச்சஅளவு 15 அல்லது ஒட்சிசன் உள்ளடக்க ஒச்ச அளவு 2.7 சதவீதம் | அறிக்கை (1)* |
| IND காலம் @ 100 DEGC | ஆகக் குறைந்தது 480 நிமிடங்கள் | ஆகக் குறைந்தது 240 நிமிடங்கள் |

அறிக்கை (1)* எம்ரீபீஈ, ரீஎம்ஈ மற்றும் எத்தானோல் சேர்க்கப்படலாம்

(x) பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சு செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்து பிரதி வர்த்தக முகாமையாளரினால் பிரதி கூட்டுத்தாபன முகாமையாளருக்கான (கடல்கடந்த வசதிகள்) பிரதியுடன் பிரதி செயற்பாட்டு முகாமையாளருக்கு 2011 யூன் 16 ஆந் திகதியிடப்பட்ட மின் அஞ்சல் அனுப்பப்பட்டதுடன்

(xi) இறங்குதுறையிலுள்ள சுதந்திர பரிசோதகரினால் சமர்ப்பிப்பதற்கு வேண்டப்பட்ட தர அறிக்கையினைப் பரீட்சிக்காது எரிபொருள் வெளியேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(xii) இந்த மொத்த கொள்கலனில் யுஎஸ் டொலர் 164,457 பெறுமதியான 1,342 பெரல் கெசோலைன் வெளியேற்றப்பட்டிருக்கவில்லை. எனினும் ஈஓசீபீஎஸ் விநியோகத்தருக்கு ரூபா 2,330 மில்லியன் மொத்த தொகையினையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது.

(xiii) குறித்த காலப்பகுதியில் இத்தரம் குறைந்த எரிபொருளைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்களிடமிருந்து 3,302 முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 1,888 முறைப்பாடுகள் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காகன இழப்பீடாக ரூபா 28 மில்லியனை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது.

(xiv) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது வழக்கம் போல Delivered Ex-ship (DES) அடிப்படையின் கீழ் எரிபொருளை இறக்குமதி செய்கின்றது. எனினும், ஈஓசீபீஎஸ் இடமிருந்து கெஸோலைன் மற்றும் கெஸ் ஒயில் என்பன இறங்குதுறை இலவச அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. ஆகவே இந்த உடன்படிக்கையின் கீழ் ஒயிலின் பொருள் விடயமும் ஆபத்தும் இறங்குதுறையில் ஈஓசீபீஎஸ் இடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டது. ஆகவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காப்புறுதி மற்றும் கப்பல் கேள்வுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கிணங்க யுஎஸ் டொலர் 585,000 கிரயத்தில் கெசோலைன் (92) மற்றும் கேஸ் ஒயில் (0.25 சதவீத மெக்ஸ் சல்பர்) என்ற இந்த இணைந்த சரக்கினை எடுத்துவருவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்தியது.

(xv) எப்ஒபீ அடிப்படையில் ஒரு பெரல் யுஎஸ் டொலர் 2 என்ற விலையில் (வட்டம் மாத்திரம்) ஈஓசீபீஎஸ் இடமிருந்து கெசோலைன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் இது டீஈஎஸ் விலைக்கு மாற்றப்பட்ட போது வட்டம் அண்ணளவாக ஒரு பெரல் யுஎஸ் டொலர் 4.14 இற்கு அதிகரித்திருந்தது. மேற்படி இந்திய எண்ணைய் கம்பனி இரண்டு கேள்விமனுக்களுக்குமாக ஈஓசீபீஎஸ் இன் வட்டத்தினை விட குறைந்த வட்டத்தினையே (முறையே யுஎஸ் டொலர் 3.15 மற்றும் யுஎஸ் டொலர் 3.90) வழங்கியிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சுகளைக் கருத்தில் கொள்ளாது இரண்டு விலை மனுக்களையும் நிராகரித்து ஈஓசீபீஎஸ் இற்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது.

**(ஆ) 140,000 மெட்ரிக் தொன் குறைந்த சல்பர் 180 சீஎஸ்ரீ எரிபொருளை ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்பத்திப் பொருள் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தல்.**

(i) மேற்கூறிய கொள்வனவிற்காக நான்கு விலைமனுக்கல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆகக்குறைந்த கேள்வி மனுவானது ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் இக்கம்பனியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட வழங்குனராக காணப்படாததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட இன்னொரு வழங்குனரான ஐ.அ.இராச்சிய கம்பனியின் சார்பாக கேள்வி மனுவினை வழங்கியிருந்தது. அத்துடன் இது ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்த்திப் பொருள் கம்பனியின் ஒரு துணைக் கம்பனியுமாக இருந்தது. இதற்கிணங்க ஒரு பதிவுசெய்யப்படாத வழங்குனரின் கேள்விக்கான கொடைமுனையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அக்கம்பனியிடமிருந்து

செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(ii) முதலாவது பொருள் விநியோகத் திகதி ஏனைய விநியோகத் திகதிகள் மற்றும் 2011 ஆகஸ்ட் 20 ஆந் திகதி அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட கேள்வி அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்களுக்கான தொடர்பு என்பவை மீதான விபரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய விநியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கொடை முனையினை தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு சிபார்சு செய்திருந்ததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் மாதிரிகள் மற்றும் விநியோகத் திகதிகள் தொடர்பான வேண்டுதல்களுடன் இணங்கியிருப்பதனை மீள உறுதிப்படுத்துவதற்கு அமைய இது எஸ்எஸ்சீஏபீசீ இனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொடை முனையினை 2011 செப்தெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து தொடங்கும் ஆறு மாத காலத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2011 செப்தெம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தினால் ஏற்றுக்கொண்டிருந்தது. முதலாவது சரக்குத் தொகுதி 2011 செப்தெம்பர் 15 இல் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆறு வாரங்களில் வழங்கப்பட வேண்டிய 35,000 மெட்றிக் தொன் +/- 10 சதவீதம் ஆன மூன்று பொதிகள் (கொள்கலன்கள்) மூலம் இது தொடர்படுத்தல் வேண்டும்.

(iv) எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2011 ஒக்டோபர் 07 ஆந் திகதி வரை விநியோகத்தருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடமுடியாதிருந்தது. இதற்கிணங்க, விநியோகித்தர் எரிபொருள் வழங்குவதனை தாமதித்திருந்ததுடன் முதலாவது சரக்கு 2011 நவம்பர் 01 ஆந் திகதி கொழும்பை வந்தடைந்திருந்தது. தாமத்தின் காரணமாக மின்சாரத் தடையினைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஏனைய விநியோகித்தர்களிடமிருந்து அவசரத் தேவையின் அடிப்படையில் குறித்த சில சந்தர்ப்பங்களில் உயர்ந்த வட்டத்துடன் கீழே குறிப்பிடப்பட்டவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இதற்கிணங்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் யுஎஸ் டொலர் 2,516,500 ஆக இருந்தது.

| தொகுதித் தொடர் | லேகன் திகதி | விநியோகத்தரின் பெயர் | அளவு | அவசரத் தேவை அடிப்படையில் வட்டம் | தவனை ஒப்பந்தத்தின் வட்டம் | வட்டத்தின் வித்தியாசம் | ஏற்பட்ட நட்டம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| --------------- | ---------- | ------------------------ | --------- | -------------------- | ------------------- | ----------------- | ------------- | ----------- |
| | | | மெ.தொன் | யூஎஸ் டொலர் | யூஎஸ் டொலர் | யூஎஸ் டொலர் | யூஎஸ் டொலர் | |
| பீகே/45/2011 | 2011 செப்தெம்பர் 20 - 25 | பெட்ரோ பிராஸ் | 20,000 | 51.88 | 54.00 | 2.12 | - | மாதிரிக்கு அப்பால் |
| பீகே/49/2011 | 2011 ஒக்டோபர் 10 -11 | பெட்ரோ பிராஸ் | 35,000 | 68.90 | 54.00 | 14.90 | 521,500 | - |
| பீகே/03/2012 | 2012 சனவரி 07 - 08 | வைடல் | 35,000 | 111.00 | 54.00 | 57.00 | 1,995,000 | - |
| மொத்த நட்டம் | | | | | | | 2,516,500 | |

(v) உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டதன் பின்னர் விநியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட லேகன் திகதி, கப்பல் இணக்கப்பாடு, கைமாற்றம் செய்யக் கூடிய நாணயக் கடிதம் முதலியவாறான நியதிகளும் நிபந்தனைகளும் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அக்கறையினைப் பாதுகாப்பதற்காக சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை பெற்றுக்கொள்ளுமாறு வர்த்தக முகாமையாளருக்கு பிரதான சட்ட உத்தியோகத்தர் ஆலோசனை தெரிவித்திருந்த போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான அபிப்பிராயம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கொள்வனவுச் செயன்முறையின் செயற்திறனின்மை காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் 140,000 மெட்றிக் தொன்களுக்குப் பதிலாக முதலாவது உடன்படிக்கையின் கீழ் மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலியம் உற்பத்திப் பொருள் கம்பனியிடமிருந்து 109,995 மெட்றிக் தொன் சல்பர் குறைவான எரிபொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

(vii) வழமையான கொள்வனவு நடைமுறையின் பட்டியலிடல் நோக்கத்திற்காக பெற்றோலியப் உற்பத்திப் பொருட்களின் அளவு “Air” அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. எனினும், மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலியம் உற்பத்திப் பொருள் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட இத்தவணை ஒப்பந்தத்தில் அளவினை நிர்ணயிப்பதற்காக Vacuum” அடிப்படை பிரயோகிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு யுஎஸ் டொலர் 54,147.51 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேற்கூறிய கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட முதலாவது தவணை ஒப்பந்தத்தின் கீழ் பின்வரும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| தொகுதி இலக்கம் | அளவு (Air) | அளவு (Vacuum) | பட்டியலுக்காகப் பயன்படுத்தப்பட்ட அளவு | ஒரு மெற்றிக் தொன்னுக்கான பட்டியல் விலை | பட்டியல் | பெறுமதி | மிகைக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|
| | மெட்றிக் தொன் | மெட்றிக் தொன் | மெட்றிக் தொன் | யுஎஸ் டொலர் | யுஎஸ் டொலர் | ரூபா மில்லியன் | யுஎஸ் டொலர் |
| பீகே/011/051 | 37,559.780 | 37,602.484 | 37,559.780 | 753.615 | 28,305.613 | 3,138 | - |
| பீகே/011/062 | 38,449.356 | 38,494.413 | 38,494.413 | 801.968 | 30,835.153 | 3,538 | 36,134.27 |
| பீகே/012/017 | 33,987.238 | 34,025.900 | 34,025.900 | 816.518 | 27,733.178 | 3,652 | 18,013.24 |
| **மொத்தம்** | | | | | | | **54,147.51** |

(viii)முதலாவது உடன்படிக்கை 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி காலாவதியாகியிருந்த போதிலும் மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலியம் உற்பத்திப் பொருள் கம்பனியிடமிருந்து 2012 மே 10 இலிருந்து 11 வரையான லேகன் காலத்துடன் 35,000 மெட்றிக் தொன் எல்எஸ்எப்ஓ இனைக் கொள்வனவு செய்வதற்கு இருப்பு மீளாய்வுக் குழு தீர்மானித்திருந்தது எனினும், பொருட்களை வழங்குவதற்காக தற்போதுள்ள உடன்படிக்கையை நீடிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை விநியோகித்தர் வேண்டியிருந்தார் இதற்கிணங்க, 2012 ஏப்ரல் 18 ஆந் திகதிய 12/0525/510/009/TBR ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2012 மே 01 ஆந் திகதியிலிருந்து 2012 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையும் உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கம்பனியினால் இரண்டாவது தவணை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு 2011 ஏப்ரல் 11 இல் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் "தாங்கி துப்பரவுவாக்கல் சான்றிதழ்" சம்பந்தமான நாணயக்கடித நிபந்தனைகளைத் தவிர்த்து அங்கீகாரத்திற்கு முன்னர் அனைத்து திருத்தப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உடன்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2012 மே 01 இலிருந்து 2012 ஒக்டோபர் 31 வரையான மேலும் ஆறு மாத காலத்திற்கு சல்பர் குறைந்த எரிபொருளை (1.8 சதவீத உச்ச அளவு சல்பர்) இறக்குமதி செய்வதற்கம் தற்போதுள்ள உடன்படிக்கையின் 3 ஆம் உறுப்புரையில் (தரித்து நிற்கும் காலம், விநியோகத்திற்காக தரித்துநிற்ககூடிய காலம், மற்றும் விலை உறுப்புரைகள்) மாற்றம் செய்வதற்குமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் மேற்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யுஏஈ) கம்பனிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட தற்போதுள்ள தவணை உடன்படிக்கையின் விரிவாக்கத்தினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தனது 2012 ஏப்ரல் 16 ஆந் திகதியிடப்பட்ட அறிக்கையின் மூலம் சிபார்சு செய்திருந்தது. மேலும் 2012 ஏப்ரல்

11 ஆந் திகதி மேற்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸ கம்பனியினால் பிரேரிக்கப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட உடன்படிக்கையிலுள்ள மேலே கூறப்பட்ட மாற்றங்கள் 2012 ஏப்ரல் 17 ஆந் திகதி எஸ்எஸ்சீஏபீசீ இனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உடன்படிக்கையின் நியதிகளின் மாற்றங்களுக்காக சிபார்சுகளையும் அங்கீகாரத்தினையும் வழங்கும் போது விலையிடல் உறுப்புரைக்குச் செய்யப்பட்ட மாற்றம் உரிய முறையில் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் அடிப்படையிலும் எஸ்எஸ்சீஏபீசீ இன் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார். மேலும் மேற்கூறிய மாற்றங்களுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான சட்ட உத்தியோகத்திடமிருந்து எதுவித ஆலோசனையோ அல்லது விளக்கமோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- “USD/MT= “FUEL OIL 180 CST 2 PCT S” + THE CONTRACT PREMIUM” என்ற ஒரு உறுப்புரையினை உள்ளடக்கிய இரண்டாவது உடன்படிக்கையில் விபரிக்கப்பட்டவாறு திருத்தப்பட்ட விலைச் சூத்திரமானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலும் எஸ்எஸ்சீஏபீசீ இனாலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.
- வார்ணாமத் திகதி அத்துடன் ஒரு மெட்றிக் தொன்னுக்கு யுஎஸ்டொலர் ஐம்பத்து நான்கு(54) நிலையான வட்டம் என்பதனைத் தொடர்ந்து வார்ணாமத் திகதிய இரண்டு(2) விடயங்கள் மற்றும் வார்ணாமத் திகதியும் இரண்டு(2) விடயங்களும் என்பனவாக வார்ணாமத் திகதியினை அண்மித்து ஐந்து (5) விலைகளுக்காக “சிங்கப்பூர்” என்ற தலைப்பின் கீழ் பிலட்ஸ் ஆசிய பசுபிக்/ அரேபியக் குடா சந்தை என்பதனால் பிரசுரிக்கப்பட்டவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினத்திற்கும் மேற்கூறிய கம்பனிக்குமிடையிலான முதலாவது உடன்படிக்கையின் பிரகாரம் எரிபொருளுக்கான டீஈஎஸ் கொழும்பு விலையானது (1.8 சதவீத உச்ச சல்பர்) மெட்றிக் கொள்களிலான வார்ணாமத்தின் அடிப்படையில் 180 சீஎஸ்ரீ (2 சதவதீம்) எரிபொருளுக்கான குறைந்த மற்றும் உயர்ந்த கேட்பு மனுக்களின் எண்கணித சராசரியின் 100 சதவீமாக யுஎஸ் டொலரின் கணித்தல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியுடனான இரண்டாவது உடன்படிக்கையில் எரிபொருளின் டீஈஎஸ் கொழும்பு விலையானது மெட்றிக் தொன்களிலான வார்ணாமத்தின் அடிப்படையில் 180 மீற்றர் சீஎஸ்ரீ 2.0 சதவீத எரிபொருள் அத்துடன் ஒரு மெற்றிக் தொன்னுக்கு யுஎஸ் டொலர் ஐம்பத்து நான்கு (54) நிலையான வட்டம் என்றவாறு யுஎஸ் டொலர்களில் கணித்தல் வேண்டும்.
- வார்ணாமத் திகதி அத்துடன் ஒரு மெட்றிக் தொன்னுக்கு யுஎஸ்டொலர் ஐம்பத்து நான்கு(54) நிலையான வட்டம் என்பதனைத் தொடர்ந்து வார்ணாமத் திகதிய இரண்டு(2) விடயங்கள் மற்றும் வார்ணாமத் திகதியும் இரண்டு(2) விடயங்களும் என்பனவாக வார்ணாமத் திகதியினை அண்மித்து ஐந்து (5) விலைகளுக்காக

"சிங்கப்பூர்" என்ற தலைப்பின் கீழ் பிலட்ஸ் ஆசிய பசுபிக்/ அரேபியக் குடா சந்தை என்பதனால் பிரசுரிக்கப்பட்டவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினத்திற்கும் மேற்கூறிய கம்பனிக்குமிடையிலான முதலாவது உடன்படிக்கையின் பிரகாரம் எரிபொருளுக்கான டீஈஎஸ் கொழும்பு விலையானது மெட்றிக் கொள்களிலான வார்ணாமத்தின் அடிப்படையில் 180 சீஎஸ்ரீ (2 சதவதீம்) எரிபொருளுக்கான குறைந்த மற்றும் உயர்ந்த கேட்பு மனுக்களின் எண்கணித சராசரியின் 100 சதவீமாக 180 சீஎஸ்ரீ 2.0 சதவீத எரிபொருள் வரையறுக்கப்பட்டிருந்தது.

- இரண்டாவது உடன்பக்கையின் பிரகாரம் யுஎஸ் டொலர் ஐம்பத்து நான்து (54) என்ற மேற்கூறிய நிரந்தர வட்ட விலையில் இரண்டு தடவை உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு மெற்றிக் தொன்னுக்கு யுஎஸ் டொலர் 54 தொகையினை மேலதிகமாகச் செலுத்தவேண்டியிருந்ததுடன் மொத்த மேலதிகக் கொடுப்பனவு யுஎஸ் டொலர் 2,060,842 ஆக இருந்தது.

| தொகுதி இலக்கம் | அளவு (Air) | அளவு (Vacuum) | பட்டியலுக்களைப் பயன்படுத்திய அளவு | ஒரு மெற்றிக் தொன்னுக்கான பட்டியல் விலை | | பட்டியல் பெறுமதி | மேலதிகக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|
| --------------- | ------------ | ---------------- | ------------------------ | ---------------------- | | --------------- | ------------------ |
| | மெற்றிக் தொன் | மெற்றிக் தொன் | மெற்றிக் தொன் | யுஎஸ் டொலர் | ரூபா மில்லியன் | யுஎஸ் டொலர் | யுஎஸ் டொலர் |
| பீகே/012/025 | 38,163.744 | 38,207.488 | 38,207.488 | 753.040 | 28,738,825 | 4,001 | 2,060,842 |
| பீகே/012/034 | 38,400.962 | | | 643.078 | 24,694,814 | 3,328 | |

- உடன்படிக்கையின் நாணயக் கடித படிவத்தின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக முகாமையாளரினால் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இணைவாக பதில் சிரேஷ்ட பிரதி நிதி முகாமையாளரினால் (வெளிநாட்டு வழங்கல்கள்) யுஎஸ் டொலர் 27,246,450 தொகைக்காக 2012 ஏப்ரல் 24 ஆந் திகதி ஒரு நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நாணயக் கடிதத்தின் பெறுமதியினை யுஎஸ் டொலர் 32,000,000 வரைக்கும் அதிகரிக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வணிக முகாமையாளரினை மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்பத்திக் கம்பனி 2012 ஏப்ரல் 26 ஆந் திகதி மின்னஞ்சல் ஒன்றின் மூலம் வேண்டிக் கொண்டது. இதற்கிணங்க நாணயக்கடித்தின் பெறுமதியினை அதிகரிப்பதன் நியாயத் தன்மையினை ஆய்வு செய்யாது பதில் சிரேஷ்ட பிரதி நிதி முகாமையாளர் (வெளிநாட்டு வழங்கல்கள்) 2012 ஏப்ரல் 26 ஆந் திகதி நாணயக் கடிதத்தின் பெறுமதியினை யுஎஸ் டொலர் 32,000,000 வரைக்கும் அதிகரித்திருந்தார். இதற்கிணங்க, உடன்படிக்கையின் விலையிடல் சூத்திரத்திலுள்ள மாற்றங்களின் நியாயத்தன்மைக்கு உரிய கவனம்

செலுத்தாது யுஎஸ் டொலர் 4,753,550 தொகையினால் நாணயக் கடிதத்தின் பெறுமதி அதிகரித்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. நாணயக் கடிதத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்கு முன்னர் பிரதி நிதி முகாமையாளர் உடன்படிக்கையினை கவனமாக வாசித்திருக்கவில்லை. இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள பிரதான பலவீனமாக இனங்காணப்பட்டது.

- எவ்வாறாயினும் கப்பலின் இயந்திரம் தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக 11,051 மெட்றிக் தொன் மாத்திரம் இரண்டாவது கப்பல் சரக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கைத் திகதி வரையும் விநியோகத்தருக்கு கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக மேற்படி ஐக்கிய அரபு இராச்சிய கம்பனிக்கு எத்தொகையினையும் கொடுப்பனவு செய்வதிலிருந்து இலங்கை வங்கியினைத் தடைசெய்யும் நீதி மன்றக் கட்டளையினை கொழும்பு வணிய மேல் நீதிமன்றத்திடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் வணிய மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பானது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி ஐ.அ.இராச்சிய பெற்றோலிய உற்பத்திப் பொருள் கம்பனி சிங்கப்பூர் எஸ்ஐஏசீ இல் நியாயச் சபை வழக்கினைத் தொடுத்திருந்தனர்.

(ix) பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் விநியோகத்தருக்குமிடையே நீண்ட சமரசத்திற்குப் பின்னர் உடன்படிக்கை/ நாணயக் கடிதத்தின் நிபந்தனைகள் பல தடவை திருத்தப்பட்டிருந்தன. இந்த இணக்கப்பாட்டுச் செயன்முறையின் காரணமாக நாட்டிலுள்ள எரிபொருள் பற்றாக்குறையினைத் தவிர்த்துக்கொள்வதற்கு மற்றொரு விநியோகத்தரிடமிருந்து ஒரே உற்பத்திப் பொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. இதற்கிணங்க பேர்னஸ் ஒயிலினை வழங்குவதற்குப் பதிலாக டீசலினை வழங்குவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் குறிப்பிடத்தக்க அளவான செலவு இடம்பெற்றிருந்தது.

**(இ) 1,500 எஸ்ஈசீ - 20,000 மெட்றிக் தொன்கள் சல்பர் குறைந்த பெற்றோலியத்தின் கொள்வனவு - பீகே/45/2011**

(i) விநியோகத்தருக்கு வழங்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் சல்பர் உள்ளடக்கத்தின் உச்ச அளவு 1.8 ஆக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் கொள்கலன் கப்பல் அளவு அறிக்கையின் பிரகாரம் சல்பர் உள்ளடக்கத்தின் உள்ளபடியான விளைவு 1.84 ஆக இருந்தது. இதற்கிணங்க, உற்பத்திப் பொருளின் வேண்டப்பட்ட மாதிரிக்கும் உள்ளபடியான மாதிரிக்குமிடையே வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. கப்பல் லேகேன் காலத்துக்குள் இறக்குதுறையினை வந்தடைதிருந்த போதிலும் உற்பத்திப் பொருளின் தரத்தின் வேறுபாட்டின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக முகாமையாளரினால் சரக்குகளை இறக்குதல் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சல்பர் குறைந்த

எரிபொருளுக்குப் பதிலாக 1,551 கிலோ லீற்றர்ஸ் ஓட்டோ டீசலினை (மாற்று எரிபொருளாக) உள்நாட்டு மின்வலு உற்பத்தியாளருக்கு வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ஓட்டோ டீசல் ரூபா 117,876,000 (1,551,000 x ரூபா 76) கிரயமாக இருந்தது. அதில், நிதி திட்டமிடல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 52 தொகையான எரிபொருள் விலையின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறைவேட்) லிமிடட்டினால் ரூபா 80,652,000 (1,551,000 x ரூபா 52) தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 37,224,000 நட்டமடைந்திருந்தது. ஆகவே, கொழும்பு இறங்கு துறையில் விநியோகிக்கப்பட்ட சரக்குகள் மாதிரிக்குப் புறம்பானதாக இருந்ததனால் விநியோகத்தர் மீது தண்டப்பணம் விதிக்கவேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு எஸ்எஸ்சீஏபீசீ இங்குச் சிபார்சு செய்தது. எனினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்காக விநியோகத்தர் மீது தண்டத்தினை விதிப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை. எவ்வாறாயினும் 1 ½ நாட்களின் பின்னர் முத்துராஜவெல தாங்கிக்கு 1,500 எஸ்ஈசீ - 20,000 மெற்றிக்தொன் அவ்வாறான சல்பர் குறைந்த எரிபொருள் இருப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) சல்பர் குறைந்த எரிபொருள் இருப்பில் இல்லாததன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மின்வலு உற்பத்தியாளருக்கு சல்பர் குறைந்த எரிபொருளுக்குப் பதிலாக ஓட்டோ டீசல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் மேற்கூறிய உற்பத்திப் பொருள் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்ட இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறை திருப்தியற்றதாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கிணங்க, 2011 யூன் 15 இலிருந்து 2012 ஆகஸ்ட் 11 வரையான காலத்தின் போது சல்பர் குறைந்த எரிபொருளுக்குப் பதிலாக ஓட்டோ டீசலினை விற்பனை செய்ததன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,728,492,800 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| காலம் | அளவு (லீற்றர்) | ஒரு லீற்றருக்கான நட்டம் | உப மொத்தம் | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| 15.06.2011-02.07.2011 | 11,814,000 | 24 | 283,536,000 | |
| 05.08.2011-16.08.2011 | 10,329,000 | 24 | 247,896,000 | 889,416,000 |
| 15.09.2011-27.09.2011 | 14,916,000 | 24 | 357,984,000 | |
| 20.12.2011-31.12.2011 | 7,029,000 | 32 | 224,928,000 | |
| 01.01.2012-23.01.2012 | 25,568,400 | 32 | 818,188,800 | 1,043,116,800 |
| 24.07.2012-11.08.2012 | 19,899,000 | 40 | 795,960,000 | 795,960,000 |
| மொத்தம் | | | | 2,728,492,800 |

(ஈ) 3,600,000 பெரல் (480,000 மெட்ரிக் தொன்) டீசலினை (0.25 சதவீத உச்ச அள வுசல்பர்) இறக்குமதி செய்தல் - சிங்கப்பூரினைத் தளமாகக் கொண்ட எமிரேட்ஸ் ஒயில் கம்பனி (ஈஓசீபீஎஸ்)

2011 மே 01 இலிருந்து தொடங்கும் மாத காலத்திற்கு கிரயமும் கேள்வும் (சீஎப்ஆர்) அடிப்படையில் ஒரு பெரல் யுஎஸ் டொலர் 1.60 வட்டத்தில் 3,600,000 பெரல் (480,000 மெட்ரிக் தொன்) டீசலை (0.25 சதவீத உச்ச அளவு சல்பர்) இறக்குமதி செய்வதற்கு சிங்கப்பூரினைத் தளமாகக் கொண்ட எமிரேட்ஸ் ஒயில் கம்பனியுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவணை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. (சீஎப்ஆர் - சரக்கு ஏற்றுமதி துறைமுகத்திலுள்ள சரக்கேற்றும் நிலையத்தில் வைத்து சரக்கின் உரிமைத் தகுதியும் ஆபத்தும் விற்பனையாளரிடமிருந்து கொள்வனவாளருக்கு மாற்றப்படுதல் வேண்டும்)

டீசலினைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2011 ஏப்ரல் 06 ஆந் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞானத்தின் அடிப்படையில் 2011 ஏப்ரல் 27 ஆந்

திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வட்டமானது கடந்த இரண்டு மாதங்களின் (2011 பெப்ரவரி மற்றும் மார்ச்) சராசரியின் அடிப்படையில் கணிக்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட கடைசி இரண்டு விலைமனுக்களானது ஒரு பெரல் யுஎஸ் டொலர் 2.00 (டீஈஎஸ்) இனை விட அதிகமாக இருந்தது.

| தொகுதி | வார்ணாமத் திகதி | உள்ளபடியான வட்டம் (ஒரு பெரலுக்கான யுஎஸ் டொலர்) | அடிப்படை |
|---|---|---|---|
| பீகே/05/2011 | 2011 பெப்ரவரி 20 | 0.45 | டீஈஎஸ் |
| பீகே/06/2011 | 2011 பெப்ரவரி 24 | 0.30 | டீஈஎஸ் |
| பீகே/07/2011 | 2011 மார்ச் 15 | 1.42 | டீஈஎஸ் |
| பீகே/08/2011 | 2011 மார்ச் 08 | 1.28 | டீஈஎஸ் |
| பீகே/09/2011 | 2011 மார்ச் 27 | 2.50* | டீஈஎஸ் |
| மொத்தம் | | 5.95 | டீஈஎஸ் |

